வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

Eelanadu ஈழநாடு

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 28.05.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 149 பக்கங்கள் : 12




# நவநாஜிய பாணியில் தமிழரின் குடித்தொகையை மாற்ற முயற்சி

## பேராசிரியர் பத்மநாதன் தெரிவிப்பு

### தமிழீழம் இந்த யுகத்தில் சாத்தியமில்லை



கொழும்பு, மே 28

**நவநாஜிய பாணியில் - பல அரசாங்க துறைகள் இணைந்து பலம் பொருந்தியவர்கள், செல்வாக்கு பொருந்தியவர்களுடன் இணைந்து எங்கள் இருப்பை - குடித்தொகையை மாற்றியமைக்க முயல்கின்றனர் என்று தெரிவித்துள்ளார் யாழ். பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன்.**

மீண்டும் எங்களின் தேசிய உரிமையை - எழுச்சியை வளர்க்க வேண்டும். தமிழீழம் என்ற பேச்சுக்கு இடமில்லை - எந்த ஒரு நாடும் ஆதரிக்காது - இந்த யுகத்தில் ஒருவராலும் அமைக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

பேராசிரியர் பத்மநாதனின் "ஒரு மறைந்துபோன நாகரிகத்தின் தரிசனம் - ஆதிகால யாழ்ப்பாணம்" நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

தமிழ் தேசியத்தின் உற்பத்திக்கு அடிநாதமான மொழி வழக்கும் இடையறாத நிலப்பரப்பும் கிறிஸ்துவுக்கு 11

# வியாழன், வெள்ளிக்கிழமை ஆசிரியர்கள் வேலை நிறுத்தம்!

கண்டி, மே 28

சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள், அதிபர்கள் எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமை பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை கண்டியில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் தேசிய ஆசிரியர் சங்கத்தின் அழைப்பாளர் ஏ. எம். எம். ரி 11

# கனடா செல்லவிருந்த இளைஞர் மோ. சைக்கிள் விபத்தில் மரணம்

தென்மராட்சி, மே 28

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதிலுடன் மோதுண்டதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

சாவகச்சேரி - புத்தூர் வீதியில், மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில், அதே இடத்தைச் சேர்ந்த 22 வயதான பி. பானுஜன் என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்த இளைஞர் புத்தூர் நோக்கி பயணித்த போதே இந்த விபத்து இடம்பெற்றது. 11

# மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள்!

## சஜித் தனக்கு உறுதியளித்தார் என்கிறார் சுமந்திரன் எம். பி.

கொழும்பு, மே 28

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை முழுமையாக வழங்குவதற்கு தான் தயாராக இருக்கிறார் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ என்னிடம் உறுதியளித்தார்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ கடந்த மே தின நிகழ்வில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்து வேன் என்று பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து, நடந்த பாராளுமன்ற அமர்வின்போது சஜித் பிரேமதாஸவை சந்தித்தேன். அப்போது, கடந்த மே தின நிகழ்வில் நான் 11

# வரும் தேர்தலில் கேகாலையில் தமிழ் எம். பி. ஒருவர் தெரிவாவார்!

## மனோ கணேசன் நம்பிக்கை

கொழும்பு, மே 28

கேகாலை மாவட்டத்தில் கடந்த தேர்தலில் கை தவறிப்போன பாராளுமன்ற உறுப்பினர் பதவி இம்முறை தேர்தலில் கிடைக்கும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.



தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பங்காளி கட்சியான ஜனநாயக மக்கள் முன்னணியின் கேகாலை மாவட்ட மாநாடு எட்டியாந்தோட்டையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய அவர்,

இது மாவட்டம் தழுவிய கட்டமைப்பு மாநாடு. 'மலைநாடு என்பது புவியியல் அடையாளம். 11

# கிராமங்களின் அபிவிருத்திக்கு 2,060 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

## விவசாய அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 28


விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு கிராமப்புற அபிவிருத்தி மற்றும் குடிமக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த எதிர்வரும் மாதங்களில் 2 ஆயிரத்து 60 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. 11

# புகைப்பழக்கத்துக்கு 15 இலட்சம் பேர் அடிமை!

கொழும்பு, மே 28

நாட்டில் 15 இலட்சம் பேர் புகைப்பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளனர் என்று மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

புகைப்பழக்கத்திலிருந்து இளையோர் பலர் 11



# திலித், கம்மன்பில, விமல் இணைந்து புதிய கூட்டணி!

கொழும்பு, மே 28

விமல் வீரவன்ஸ, திலித் ஜயவீர, உதய கம்மன்பில, சன்ன ஜயசுமண ஆகியோர் இணைந்து 'சர்வசன அதிகாரம்' என்ற பெயரில் புதிய அரசியல் கூட்டணியை நேற்று திங்கட்கிழமை அங்குரார்ப்பணம் செய்தனர்.

"ஒன்றிணைந்து கட்டியெழுப்பும் நாடு - மகிழ்ச்சி நிறைந்த நாடு" என்ற கருப்பொருளில் 11

# ரூ. 1,700 நாள் சம்பளம் வழங்கவே முடியாது!

## தோட்ட உரிமையாளர் சங்கம்

கொழும்பு, மே 28

தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்மொழியப்பட்டுள்ள 1700 ரூபா சம்பள அதிகரிப்பை அரசாங்கம் பரிந்துரைத்தவாறு வழங்க முடியாது என்று தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேயிலை தோட்ட உரிமையாளர்களுடன் கலந்தாலோசிக்காமல் குறித்த சம்பள அதிகரிப்பை அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்றும் அந்த சங்கத்தின் பேச்சாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்தார்.

நேற்று அந்த சங்கம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், "தொழில்துறையில் உள்ள அனைத்து தரப்பினரின் நலன்கள்மீது எந்த அக்கறையும் இல்லாமல் அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது. எந்த பலனையும் தராத இந்தத் தீர்மானம் ஊடாக இந்நாட்டின் தேயிலை மற்றும் இறப்பர் தொழிலின் ஒவ்வொரு அம்சத்தையும் மேலும் பலவீனப்படுத்தும் என்பது எமது நம்பிக்கை. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

யாழ். பொது நூலகம் யாழ். எம். பி. யோகேஸ்வரனின் இல்லம் 'ஈழநாடு' பத்திரிகை அலுவலகம் என்பன சிறீலங்கா அரச ஆதரவுபெற்ற காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்ட சில மாதங்களில் கொழும்பில் பொதுநலவாய அமைச்சர்கள் மாநாடு ஒன்று நடைபெற்றது.

அந்த மாநாட்டை தமிழர் விடுதலைக் கூட்டணி பகிஷ்கரிப்பது என்று முடிவுசெய்திருந்தது. அப்போது இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் பதவியில் இருந்தார். அதனால் அவர்களின் அந்த பகிஷ்கரிப்புக் கோரிக்கை சர்வதேச அளவில் பேசப்படுகின்ற விடயமாகியிருந்தது.

யாழ். பொதுநூலக எரிப்புக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பகிஷ்கரிப்புக்கு, முக்கியமாக பிரிட்டன் ஆதரவு வழங்கியதுடன் அதற்கு ஆதரவாகவும் அறிக்கை வெளியிட்டிருந்தது.

அந்த மாநாட்டில் உரையாற்றிய அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன தனது மாநாட்டு ஆரம்ப உரையில், பிரிட்டன் வெளிவிவகார அமைச்சரைப் பார்த்து சொன்னார், "கண்ணாடி வீட்டிலிருந்து கல் எறியாதீர்கள். அயர்லாந்தில் நடக்கும் விடயங்களை கவனியுங்கள். யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்ட அந்த சம்பவம் தொடர்பாக நாங்கள் விசாரணைகளை நடத்துவோம். குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்" என்று.

மாநாட்டின் இடைவேளையின் போது, அங்கே கூடியிருந்த ஊடகவியலாளர்கள் மத்தியில் இருந்து மூத்த ஊடகவியலாளர் கிளரன்ஸ் பெர்னாண்டோ ஒரு விடயத்தை சொன்னார். றொய்ட்டர் செய்தி நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதியாக இருந்த கிளரன்ஸ் பெர்னாண்டோ, முன்னாள் சபாநாயகர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸின் நெருங்கிய உறவினர். ஆனந்த திஸ்ஸ டி அல்விஸும் ஒரு முன்னாள் ஊடகவியலாளர்தான்.

கிளரன்ஸ் சொன்னது இதுதான்: "ஜே. ஆர்., இந்த மாநாட்டில் அமிர்தலிங்கம் இல்லை என்ற துணிச்சலில்தான் அப்படிப் பேசினார். அமிர்தலிங்கம் இங்கே இருந்திருந்தால், இப்படி பேசிவிட்டு மாநாட்டு மண்டபத்தை விட்டு ஜே. ஆர். வெளியேறியிருக்க முடியாது..." என்று.

இந்தச் சம்பவத்தை எனக்கு நேற்று ஞாபகப்படுத்தினார், 'ஈழநாடு மாலி' என்ற மகாலிங்கசிவம். அவர் அப்போது 'ஈழநாடு' வின் கொழும்பு பிரதிநிதியாக பணியாற்றிய காலம் அது.

இலங்கையில் விரைவில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளே தீர்மானிக்கும் வாக்குகளாக இருக்கப்போகின்றன என்பதையே அனைத்துத் தரப்பினரும் கூறிவருகின்றனர்.

அதனால்தான், வேட்பாளர்களாக போட்டியிடவிருப்பதாக எதிர்பார்க்கப்படும் மூன்று வேட்பாளர்களுமே தமிழ் மக்களை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

ஆனால், அவ்வாறு வருபவர்களும் தமிழ் மக்கள் பற்றியும் அவர்களின் அரசியல் போராட்டங்கள் பற்றியும் தெரிவிக்கின்ற விடயங்கள் மேலே சொன்ன சம்பவத்தை எமக்கு ஞாபகப்படுத்தின.

வடக்குக்கு வந்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரனைச் சந்தித்தபோது தெரிவித்த விடயங்கள் குறித்து நேற்று இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

அவர் தெரிவித்திருந்த மற்றுமொரு விடயத்தை சுட்டிக்காட்டிய நண்பர் மாலி, "நாற்பது வயதுக்கு குறைந்தவர்கள் எவரும் இனப்பிரச்னை பற்றியோ அதற்கு தீர்வு தேவை என்பது பற்றியோ அக்கறைகொள்ளவில்லை" என்றவாறும் தெரிவித்திருக்கிறார். அதன் அர்த்தம் இந்த வயோதிபர்களின் காலம் முடிந்துவிட்டால் இனப்பிரச்னை என்ற ஒன்றே இருக்காது என்பதுதானே.

அதனால்தான் அவர் இப்போது அரசியல் தீர்வு அவசரமில்லை என்பதையும் விக்னேஸ்வரனிடம் சொல்லிச் சென்றிருக்கிறார்.

நமது தமிழ்த் தேசியத் தலைவர்கள் பலர் எற்கனவே ரணிலுடன் நெருங்கிய நட்பு வட்டத்தில் இருப்பவர்கள் என்பது இரகசியமானது அல்ல. அவர்களைப் பொறுத்தவரை ஏற்கனவே ரணிலுக்கு சில வாக்குறுதிகளையும் வழங்கியிருக்கலாம். அதனால்தான் அவர்கள் தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் பகிரங்கமாக அதனை ஆதரிக்க தயக்கம் காட்டி வருகின்றனர் என்பதும் புரிந்துகொள்ளக்கூடியதுதான். அதில்கூட தவறு இருப்பதாக யாரும் வாதிடப் போவதில்லை. ஆனால், ரணில், விக்னேஸ்வரனிடம் சொன்னதுபோல - சில விடயங்களை பகிரங்கமாக சொல்லிச் சென்ற பின்னரும் அவருக்கு வாக்களியுங்கள் என்று தமிழ் மக்களைக் கேட்கக்கூடிய துணிச்சல் அந்த நமது தலைவர்களுக்கு இனியும் வருமா என்பது தெரியவில்லை.

ரணிலின் பாஷையிலேயே சொல்வதானாலும், அபிவிருத்திதான் தற்போதைய முக்கிய தேவை என்றாலும்கூட அதனை மாகாண நிர்வாகம் ஊடாகவே செய்யவேண்டியிருக்கும் நிலையில், மேற்கு மாகாணம் நாட்டின் தேசிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்வதுபோல ஏனைய மாகாணங்களையும் மாற்ற வேண்டும் என்று ரணில் முன்னர் ஒருதடவை சொல்லியிருந்தார்.

அவ்வாறு மாகாணங்களை மாற்ற வேண்டும் என்றால், பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவது இருக்கட்டும், அதற்கு முதலில் ஏற்கனவே மாகாண சபைகள் இயங்கியதுபோலாவது இயங்கவேண்டும். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு இயங்கவேண்டுமே தவிர, ரணில் தனது பிரதிநிதிகளைக் கொண்டு இயக்கவேண்டும் என்பதல்ல.

எனவே, தமிழ் மக்களின் வாக்குகள் தனக்கு தேவை என்று ரணில் கருதினால் ஆகக்குறைந்தது ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர், பொதுத்தேர்தல் நடக்கின்ற போதாவது மாகாண சபைகளுக்கும் தேர்தலை ஒன்றாகவே நடத்தவேண்டும். அப்படி நடத்துவதற்கு ஏதுவாக, பழைய முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக பாராளுமன்றில் சட்டம் இயற்றவேண்டும்.

அதற்காகவே நமது எம். பி. சுமந்திரன் ஏற்கனவே தாக்கல் செய்திருக்கும் தனிநபர் பிரேரணையையே வாக்கெடுப்புக்கு விட்டு சபையில் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

மாகாண சபைகளுக்கு முழு அதிகாரத்தை வழங்க முற்பட்டால் அது சிங்கள மக்கள் மத்தியில் தனக்கு கிடைக்கும் ஆதரவை குறைத்துவிடும் என்று வாதிடலாம். ஆனால், முன்னர் பல தசாப்தங்களாக இயங்கியதுபோல அதே அதிகாரங்களுடன் என்றாலும் மாகாண சபைகள் இயங்குவதை யாரும் எதிர்க்கப்போவதில்லையே.

இதனை என்றாலும் செய்துவிட்டுத்தான் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்க வரவேண்டும் என்று சொல்கின்ற துணிச்சலாவது நமது தலைவர்களுக்கு வருகிறதா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.!

**ஊர்க்குருவி.**

# பல்கலை மாணவர் கற்றல் குறித்து அரசாங்கம் தொடர்ந்து பாராமுகம்!

## வடமாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே.28

நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர்களின் கற்றல் செயற்பாடு தொடர்பில் அரசாங்கம் அக்கறையின்றி செயற்படுவதாக வட மாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் வட மாகாண தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

கடந்த 25 நாட்களாக யாழ். பல்கலைக்கழகம் உள்ளிட்ட நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக் கழகங்களில் கல்விசாரா ஊழியர்கள் அனைவரும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அனைத்து பல்கலைக் கழகங்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் தலைமையில் 02.05.2024 நண்பகல் 12 மணியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம், பல்கலைக்கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் நீண்ட நெடுங்காலப் பிரச்னைகள் தொடர்பானது ஆகும். 2016ஆம் ஆண்டிலிருந்தே பல கட்ட கலந்துரையாடல்கள் பேச்சுவார்த்தைகள் நடத்தியும், கல்வி அமைச்சுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும் அளவுக்கதிகமான கால அவகாசம் வழங்கப்பட்டும், இதுவரை தீர்வு எதனையும் வழங்காமல் தங்கள் கோரிக்கைகள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் அணுகப்படுவதையிட்டு பல்கலைக் கழகங்களில் பணிபுரியும் கல்விசாரா ஊழியர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

பல்கலைக்கழகங்களை தனியார்மயமாக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமே இப்பாராமுகம் என நடுநிலையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒரு தொழிற்சங்க சம்மேளனம் என்ற கோதாவிலும், எமது சம்மேளனத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம் ஓர் அங்கமாக உள்ளது என்ற அடிப்படையிலும் அனைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு இனியும் தாமதிக்காமல் உரிய தீர்வை வழங்குமாறு நாம் அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

அரச பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் கல்வி இவ்வேலை நிறுத்தம் காரணமாக தவிர்க்க முடியாதவாறு தடைப்பட்டுள்ளதையிட்டு அரசாங்கம் அக்கறையற்றிருப்பதும் அரச பல்கலைக்கழகங்களை புறக்கணித்து தனியார் பல்கலைக்கழகங்களை மட்டும் ஊக்குவிப்பதற்குத்தானோ எனவும் நாம் ஐயுறுகிறோம் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்-என்றுள்ளது. (அ)

# 25 மாவட்டங்களிலும் ஜனாதிபதி அலுவலகம்

## உருவாக்கப்படும் என்கிறார் சஜித்

கொழும்பு, மே. 28

தாம் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டதும் 25 மாவட்டங்களிலும் ஜனாதிபதி காரியாலயங்கள் உருவாக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் உரையாற்றிய போது அவர் இதனை கூறினார்.

பிரதான ஜனாதிபதி செயலகத்தின் உப காரியாலயங்கள் மாவட்ட ரீதியில் நிறுவப்பட்டு மக்களுக்கு சேவை வழங்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

மக்கள் மாவட்ட ரீதியான காரியாலயங்களுக்குச் சென்று தங்களது பிரச்னைகளுக்கு தீர்வு பெற்றுக்கொள்ளக்கூடிய ஓர் பொறிமுறைமை உரு



வாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வரலாற்றில் எந்தவொரு தலைவரும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு மக்களுக்கு சேவையாற்றியதில்லை. தான் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டே மக்களுக்கு சேவையாற்றத் தொடங்கி விட்டதாகவும் அவர் கூறினார். (அ)

# திட்டமிட்டு சேறு பூசும் சமூக ஊடகங்கள்!

## அமைச்சர் ஹரீன் விசனம்



கொழும்பு, மே. 28

சில சமூக ஊடகங்கள் திட்டமிட்ட அடிப்படையில் சேறு பூசல்களில் ஈடுபட்டு வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

சில சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி கிரிக்கெட் விளையாட்டின் மீது ஆபத்தான சேறு பூசல்கள் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

இலங்கையில் முதன் முறையாக கொல்ப் அக்கடமி ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சேறு பூசல்களில் ஈடுபடும் சமூக ஊடகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

குறிப்பாக எல்.பி.எல் போட்டித் தொடரின் தம்புள்ளை கழகம் தொடர்பிலான சம்பவத்தில் என் மீதும் சனத் ஜயசூரிய மீதும் குற்றம் சுமத்தப்படுகிறது.

விளையாட்டுக் குற்றச் செயல்களை தடுக்கும் சட்டத்தை நாம்மே அறிமுகம் செய்தோம். உலகில் எங்குமில்லா வலுவான சட்டம் இலங்கையில் காணப்படுகிறது.

புதிய ஒன்லைன் சட்டத்தின் ஊடாக சேறு பூசுவோரின் சமூக ஊடக கணக்குகள் தடை செய்யப் படும் - என்றார் அமைச்சர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
28.05.2024 செவ்வாய்க்கிழமை

குரோதி வருடம், வைகாசி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் தேசியத்தின் எதிர்காலம்?

எஸ். ஜே. வி. செல்வநாயகம் இலங்கை தமிழ் அரசு கட்சியை உருவாக்கியபோது கூறினார் - “நான் உங்களுக்கு ஓர் அடையாளத்தை ஏற்படுத்தித் தருவேன்” அவர் கூறிய அடையாளம் என்பது தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் - அந்தத் தேசிய இனத்தின் தாயகம் வட, கிழக்காகும். செல்வநாயகத்தால் போடப்பட்ட அடித்தளத்திலிருந்தே - பின்னர், ஆயுத விடுதலை இயக்கங்கள் உருவாகின. எந்தவோர் அரசியல் போக்கும் தன்னிச்சையாக எழுச்சி கொள்வதில்லை.

ஓர் அரசியல் போக்கின் தொடர்ச்சியாகவே இயக்கங்கள் தோற்றம் பெறுகின்றன. அவ்வாறு தோற்றம் பெறும் அமைப்புகள் குறிப்பிட்ட அரசியல் சூழலால் வளர்ச்சியுறுகின்றன - குறிப்பிட்ட சூழ்நிலையை புரிந்து கொள்ளத் தவறுகின்ற அல்லது புதிய சவால்களை புரிந்து கொண்டு அதற்கேற்றவாறு மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ள மறுக்கின்ற அமைப்புகள் உதிர்ந்துபோக நிலைக்கக்கூடியனவே நிலைக்கின்றன. எந்தவோர் அரசியல் போக்கும் இந்த அடிப்படையை கொண்டதாகவே இருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் எழுச்சியே தமிழ் தேசியவாதத்தின் உச்சமாகும். விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது தமிழ் அரசு கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆயுத இயக்கங்கள் போன்ற அனைத்தினதும் எழுச்சியினதும் வீழ்ச்சியினதும் விளைவாகும். 2009இல் விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி தமிழ் தேசியத்தின் உச்சமான எழுச்சியினதும் முடிவாகவே அமைந்தது. ஏனெனில், விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற ஓர் அமைப்பின் வீழ்ச்சியின் பின்னரான அரசியல் போக்கை, அதற்கு நிகரான ஒன்றாக ஒருபோதுமே முன்னெடுக்க முடியாது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி மீளவும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு மிதவாத முகத்தை வழங்கியது. ஆனால், இந்த இடத்திலிருந்து தமிழ்த் தேசிய அரசியல் வீழ்ச்சி நோக்கிய சாயத் தொடங்கியது. தொடர்ந்து சரிந்து கொண்டே செல்கின்றது. சுருங்கக் கூறுவதானால், தமிழ் தேசியத்தின் எதிர்காலம் பெருமளவுக்கு பூச்சியத்தை நோக்கியே செல்வதாக தெரிகின்றது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் செயலாளர் பதவி மட்டக்களப்புக்கு வழங்கப்பட வேண்டும் - அதனை தொடர்ந்தும் நீங்களே வைத்துக் கொண்டிருப்பதை மட்டக்களப்பான் எவரும் செயலாளராக வரக் கூடாதென்று என்னும் எண்ணம் தமிழ் அரசு கட்சியை சேர்ந்த வடக்கு மாகாணத்தவர் சிலரிடம் இருக்கின்றதென்று எண்ணுவதில் தவறில்லை தானே - என்று தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மூத்த உறுப்பினர் ஒருவர் கூறுகின்றார் என்றால், செல்வநாயகம் அவர்கள் உருவாக்கிய கட்சி எந்த நிலையில் இருக்கின்றது? தமிழ்த் தேசியத்தின் எதிர்காலம் எந்த நிலையிலிருக்கின்றது?

ஒப்பீட்டு அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியத்தின் அத்திபாரமாக இருந்தது. உள்ளூராட்சி தேர்தலை காரணம் காண்பித்து தமிழ் அரசு கட்சி வெளியேறியதைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயலிழந்தது. ஒரு தேசியவாத அரசியலின் பலம் என்பது ஒரு கட்டுறுதியான அரசியல் ஸ்தாபனத்தில்தான் தங்கியிருக்கின்றது. செல்வநாயகம் காலம் தொடக்கம் பிரபாகரன் காலம் வரையில் கட்டுறுதியான தேசிய இயக்கம் ஒன்றே தமிழ்த் தேசிய அரசியலை பாதுகாத்து அடுத்த தலைமுறையிடம் ஒப்படைத்தது. ஆனால், சம்பந்தன் தலைமை அதனை முறையாக முன்னெடுக்கவில்லை. ஒருவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு கட்சியாக பதிவு செய்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

கடந்த 75 வருட கால அரசியலில் இந்தளவுக்கு தமிழ்த் தேசிய அரசியல் பலவீனமாக இருந்ததில்லை. ஒரு புதிய அரசியல் மாற்றம் ஏற்பட்டு புதியதொரு தலைமை தமிழ்த் தேசிய அரசியலை பொறுப்பேற்றால் மட்டுமே உய்வதற்கு வழியுண்டாகும். இல்லாவிட்டால், மெல்லச் சிதைந்து போகும் நிலையிலேயே தமிழ்த் தேசிய அரசியல் இருக்கின்றது.

# பொதுத் தேர்தலை நடத்த நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, மே. 28

இந்த ஆண்டில் பொதுத் தேர்தல் நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும், ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஏ.எல்.ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் நடத்தப்படவேண்டுமாயின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டில் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிதியானது முழுக்க முழுக்க ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் நோக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அதன் பின்னர் பொதுத் தேர்தல் நடத்துவதற்காக நிதியை ஒதுக்கீடு செய்ய முடியாது. ஜனாதிபதியினால் மட்டுமே இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்ய முடியும் என அவர் குறிப்பிட்டார்.

(அ)

# மின் கட்டண திருத்தம் தொடர்பில் மௌனம் காக்கும் மின்சார சபை!

கொழும்பு, மே. 28

மின் கட்டணத் திருத்தம் தொடர்பிலான முன்மொழிவை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதியாகும் போது இலங்கை மின்சார சபை மூலம் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு சமர்பிக்கவேண்டிய நிலையில் இதுவரையில் அது தொடர்பிலான முன்மொழிவுகள் எதுவும் சமர்பிக்கப்படவில்லை என ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவர் ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்தார்.

குறித்த மின் கட்டணத் திருத்தம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்மொழியுமாறு மூன்று சந்தர்ப்பங்களில் மின்சார சபைக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தா லும் அதற்கு எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு மற்றும் 2024ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை மின்சார சபை அதிக இலாபங்களை ஈட்டியிருந்தது.

குறித்த இலாபத்தை மின் பாவனையாளர்களுக்கு வழங்க விருப்பமின்மையால் இவ்வாறு மின் கட்டண திருத்த முன்மொழிவை வழங்க தாமதப்படுத்தி வருவதாக ஒரு சாதாரண சந்தேகம் எழுந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், குறித்த மின் கட்டணத் திருத் தம் தொடர்பிலான கலந்துரையாடல் இறுதிக் கட்டத்தை நெருங்கியுள்ளதாகவும், தற்போது இருக்கும் கட்டணத்தையே தொடர்ந்தும் தக்க வைக்க அல்லது சிறிய தொகையை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபையின் பெயர் குறிப்பிட விரும்பாத உயர் அதி காரி ஒருவர் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டார்.

# யாழ்ப்பாணத்தில் மோ. சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே. 28

யாழ்ப்பாணத்தில் மோட்டார் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்துள்ளதாகவும் , திருடப்படும் மோட்டார் சைக்கிள்கள் உடனேயே உதிரிபாகங்களாக பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-


யாழ்ப்பாண நகர் பகுதிகளை அண்மித்த பகுதிகளில் கடந்த சில மாதங்களில் 32 மோட்டார் சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன. அவை தொடர்பிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

விசாரணைகளின்போது , திருடப்படும் மோட்டார் சைக்கிள்களை உடனேயே உதிரிபாகங்களாக பிரித்து விற்பனையில் ஈடுபடுகின்றனர்.அதானல் மோட்டார் சைக்கிள்களை மீட்பதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம்-என்றார்.

மேலும் , மோட்டார் சைக்கிள்களை பாதுகாப்பாக நிறுத்தி விட்டு, அவற்றுக்கு “ஹாண்டில் லொக்” போட்டு செல்லுமாறும் , மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே - 28 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 15
நல்ல நேரம் : 02.22 - 04.52
ராகு காலம் : 10.22 - 11.52
திதி : பஞ்சமி




**மேடம்**

கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**இடபம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம் வந்துப்போகும். முக்கிய முடிவுகளை தவிர்ப்பது நல்லது. சிலரை நினைத்து வருத்தப்படுவீர்கள். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**மிதுனம்**

சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் உதவிகள் உண்டு. மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் லாபம் வரும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**கடகம்**

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். வழக் கில் சாதகமான தீர்ப்பு வரும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**சிம்மம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**

பால்ய நண்பர் ஒருவரை சந்திப்பீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில முக்கிய காரியங்களை முடிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**

தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். விவாதங்கள் வெற்றி பெறும் நாள்.

**விருட்சிகம்**

கணவன்-மனைவிக்குள் அன்பு ஆதரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை உருவாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். நன்மை நடக்கும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். நண்பர்கள், உறவினர்களால் செலவுகள் இருக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**மகரம்**

எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வாகனத்தில் அதிக வேகம் வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கும்பம்**

எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் விரும்பி வருவார்கள். சிறப்பான நாள்.

**மீனம்**

கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உறவினர், நண்பர்களால் நன்மை உண்டு. புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபார ஒப்பந்தம் கையெழுத்தாகும். சாதிக்கும் நாள்.

# பயங்கரவாத அமைப்புக்கு யூ-ரியூப் மூலம் ஆள் சேர்ப்பு

## என். ஐ. ஏ. விசாரணையில் அம்பலம்

சென்னை, மே 28

யூ-ரியூப் சனல் மூலம் தகவல்களை பரப்பி பயங்கரவாத அமைப்புக்கு ஆட்களை சேர்த்தமை என். ஐ. ஏயின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சென்னையில் பயங்கரவாத அமைப்புக்கு ஆதரவாக செயல்பட்டனரென பேராசிரியர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணையை தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ.) தொடங்கியுள்ளது.

கைதானவர்கள் யூ-ரியூப் சனல் மூலமாக இந்திய தேர்தல் முறைமை, அரசமைப்பு என்பவற்றுக்கு எதிராகப் பேசி காணொலிகளை வெளியிட்டு வந்துள்ளனர்.

காணொலிகள் மூலம் ஈர்க்கப்பட்டவர்களை அவர்கள் ராயப்பேட்டையில் இரகசிய கூட்டங்களை நடத்தி அவர்களை பயங்கவராத நடவடிக்கைக்கு தயார்ப்படுத்தியமை தெரிய வந்துள்ளது.

கைதானவர்களிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பபட்டு வருவதுடன், மேலும் பலர் கைது செய்யப்படுவர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# 3ஆவது முறையாக வென்று பா. ஜ. க. ஆட்சி அமைக்கும்

## அண்ணாமலை தெரிவிப்பு

சென்னை, மே 28

3ஆவது முறையாக இன்னும் அதிகமான தொகுதிகளை பெற்று பா. ஜ. க. ஆட்சி அமைப்பது உறுதி. 3ஆவது முறையாக பா. ஜ. க. ஆட்சிக்கு வரவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். பா. ஜ. க.மீது எந்தவித குறையும் இல்லை. எனவே, வெற்றியை கொண்டாட தயாராகுங்கள்." என்று பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை பேசியுள்ளார்.

பா. ஜ. கட்சியின் தமிழ்நாடு முழுவதற்குமான பொறுப்பாளர்கள், மாவட்ட தலைவர்கள், அணித் தலைவர்கள், வேட்பாளர்களை நேற்று சந்தித்துப் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் அண்ணாமலை பேசுகையில், இந்தியா கூட்டணியின் தலைவர்கள் பிரதமர் கனவில் உள்ளனர். இந்த கனவு வருகிற ஜூன் 4ஆம் திகதி காலை 11 மணி வரை மட்டுமே இருக்கும்.

3ஆவது முறையாக இன்னும் அதிகமான தொகுதிகளை பெற்று பா. ஜ. க. ஆட்சி அமைப்பது உறுதி. 3ஆவது முறையாக பா. ஜ. க. ஆட்சிக்கு வரவேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். பா. ஜ. க. மீது எந்தவித குறையும் இல்லை. எனவே, வெற்றியை கொண்டாட தயாராகுங்கள் - என்றார்.

# 2026 சட்டப் பேரவைத் தேர்தலுக்கு இப்போதே தயாராகும் தி. மு. க!

## அமைச்சரவையிலும் விரைவில் மாற்றம்!

சென்னை, மே 28

மக்களவை தேர்தல் முடிந்த நிலையில், அடுத்ததாக 2026 இல் நடைபெறும் சட்டப் பேரவை தேர்தலுக்கு இப்போதே கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில், அமைச்சரவை மற்றும் கட்சி நிர்வாகத்தில் பல்வேறு மாற்றங்களை கொண்டுவர முதல்வர் மு. க. ஸ்டாலின் முடிவெடுத்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.



மக்களவைத் தேர்தல் தற்போது நடைபெற்று வந்தாலும், கடந்த ஓராண்டுக்கு முன்னதாகவே அடிப்படை பணிகளை தொடங்கிய முதல் கட்சி தி. மு. க., பா. ஜ. க எதிர்ப்பை பலப்படுத்தும் விதமாக, முதலில் சமூக நீதி கூட்டமைப்பை தொடங்கி, தற்போதைய இந்தியா கூட்டணிக்கு வித்திட்டது முதல்வர் மு. க. ஸ்டாலின்தான்.

இந்த நிலையில், முதல்கட்டமாக, அமைச்சரவையில் மாற்றம். அடுத்த கட்டமாக கட்சியில் மாவட்ட செயலாளர்கள் மாற்றம் தி. மு. க. 2026 தேர்தலுக்கு இப்போதே தயாராகி வருகின்றது. (ஐ)

# ஜெயலலிதா இந்துத்துவா தலைவர்

## பா. ஜ. க. மீண்டும் சர்ச்சை கருத்து

சென்னை, மே 28

ஜெயலலிதா இந்து மதம் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இந்துத்துவா தலைவர். அவர் இந்துத்துவா தலைவர் என்பதை யாரும் மறுக்க முடியாது - என்று கூறியுள்ளார் தமிழிசை சவுந்தரராஜன்.

பா. ஜ. க. மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் சென்னையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது,

"ஜெயலலிதா இந்து மதம் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட இந்துத்துவா தலைவர். அவர் இந்துத்துவா தலைவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. கர சேவர்களுக்கு பாராட்டு தெரிவித்ததாக இருக்கட்டும். கர சேவையை காரணம்காட்டி பா. ஜ. க. ஆட்சி கலைக்கப்பட்ட போது அது தவறு என துணிச்சலாக கண்டித்தவர் அவர்.

ஜெயலலிதா இன்று உயிருடன் இருந்திருந்தால் இராமர் கோவிலுக்கு சென்று வழிபட்டு, இராமர் கோவில் குறித்த கனவு நிறைவேறியிருக்கிறது என்று பேசியிருப்பார் - என்றார்.

முன்னதாக பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை ஜெயலலிதாவை இந்துத்துவா தலைவர் என்று கூறியமை பெரும் சர்ச்சையாக வெடித்தது. இந்த நிலையில், அந்தக் கட்சியின் தமிழிசை மீண்டும் அதே கருத்தைக் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புதுச்சேரியில் கலைஞர் அறிவாலயம் கட்ட அனுமதி!

புதுச்சேரி, மே 28

புதுச்சேரியில் கலைஞர் அறிவாலயம் கட்டுவதற்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் அனுமதி அளித்துள்ளார். இதன்படி, புதுச்சேரி கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள தி. மு. கவுக்கு சொந்தமான இடத்தில் கலைஞர் அறிவாலயம் புதுச்சேரி நகர குழுமத்தின் அனுமதி பெற்று கட்டப்படவுள்ளது.

புதுவை மாநில தி. மு. க. செயல்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

முன்னதாக, புதுச்சேரியில் கலைஞர் அறிவாலயம் கட்டும் திட்டத்துக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் அனுமதி அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேறு பூசுவதை விடுத்து சேர்ந்து செயல்படுங்கள்

## ஆளும் தரப்பை அழைக்கிறார் சஜித்

கொழும்பு, மே. 28

**சமூக ஊடகங்களின் வாயிலாக பொய்யான தகவல்களைப் பரப்பி, சேறு பூசுவதை விடுத்து தம்முடன் இணைந்து மக்களுக்கு சேவையாற்ற முன்வருமாறு ஆளும் தரப்பினருக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அழைப்பு விடுத்துள்ளார்.**



பிரபஞ்சம் தகவல் தொழில் நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 200ஆவது கட்டமாக அனுராதபுரம் - கெக்கிராவ பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - பஸ்களை வழங்கும் போது எம்மை பலர் விமர்சிக்கின்றனர்.

பாடசாலைகளுக்கு பெருந்துத் திட்டம் எந்தளவு முக்கியமானது என்பது தற்போதைய அரசாங்கத்திற்கு நன்றாகத் தெரியும்.

கல்விக்கு முன்னுரிமை அளிப்பதே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியக் கொள்கைகளில் பிரதானமானது.

இதற்கு எம்மிடம் பல வேலைத்திட்டங்கள் இருக்கின்றன.

இவற்றைக் கூறும் போது, சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி பல்வேறு விதமாக மக்களுக்கு போலியான தகவல்களை வழங்கி, மீண்டும் மக்களை ஏமாற்றும் முயற்சி இடம்பெற்று வருகிறது - என்றார். (அ)

# கோவிலில் உண்டியலை உடைத்து திருடியவர் கைது!

யாழ்ப்பாணம், மே. 28

ஆவரங்கால் சிவன் கோவிலில் உண்டியல் உடைத்து திருட்டில் ஈடுபட்ட ஒருவர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

குறித்த ஆலயத்தில் திருடிவிட்டு மற்றொரு ஆலயத்தில் திருட முற்பட்ட போதே குறித்த நபர் அச்சுவேலி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

குறித்த நபரிடம் இருந்து திருடப்பட்ட பணமும் சில பொருட்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

விசாரணைகளுக்கு பின்னர் சந்தேகநபரை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மரக்கறிகளின் விலை அதிகரிப்பு!

கொழும்பு, மே. 28

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சந்தைகளில் மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளது.

கடந்த காலங்களில் கணிசமான அளவு குறைவடைந்திருந்த மரக்கறிகளின் விலை தற்போது வேகமாக அதிகரித்து வருவதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, ஒரு கிலோகிராம் போஞ்சி 700 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் கறிமிளகாய் 480 ரூபாவாகவும் அதிகரித்துள்ளது.

அத்துடன் மத்திய மலைநாட்டில் பயிரிடப்படும் ஏனைய மரக்கறிகளின் விலை 350 ரூபாவாக அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் குறிப்பிட்டனர். (அ)



# ஏழு யானைகள் சடலங்கள் மீட்பு!

கொழும்பு, மே. 28

பொலனறுவை வெள்ள தேசிய பூங்காவின் ஹந்த பன்வில வனப் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் உயிரிழந்த காட்டு யானைகளின் ஏழு சடலங்கள் நேற்று முன் தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் சுற்றாடல் ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த காட்டு யானைகளில் 8, 9, 10 வயதுடைய ஐந்து இளம் யானைகளும், 30 மற்றும் 35 வயதுடைய இரண்டு காட்டு யானைகளும் அடங்குகின்றன.

ஹந்தபன்வில ஏரியின் கால்வாய் பகுதியில் ஜப்பானிய ஜபரா உள்ளிட்ட பல்வேறு செடிகள் நிரம்பி யுள்ளதாகவும், கால்வாயில் பல இடங்களில் 7 யானைகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளை மேற்கொண்ட வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யானைகளின் உடல்கள் அழுகிய நிலையில் காணப்பட்டன.

கடந்த சில நாட்களாக அப்பகுதியில் பெய்து வரும் தொடர் மழையினால் ஹந்த பன்வில குளம் நிரம்பி கால்வாய் ஊடாக மகாவலி ஆற்றில் நீர் பாய்ந்தது. யானைகள் ஓடையை கடக்கும்போது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, ஜப்பானிய ஜபரா உள்ளிட்ட தாவரங்களில் சிக்கி இறந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

பொலனறுவை வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டபிள்யூ. எல்.பி. எதிரிசிங்கவிடம் தொலைபேசி மூலம் வினவியபோது, உயிரிழந்த ஏழு காட்டு யானைகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும், பிரேத பரிசோதனையை மேற்கொள்ளுமாறு உரிய கால்நடை வைத்தியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# இஞ்சியின் விலை அதிகரிப்பு

கொழும்பு, மே. 28

இஞ்சியின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

ஒரு கிலோகிராம் இஞ்சியின் விலை 5,000 ரூபாவை எட்டியுள்ளதாக நாரஹேன்பிட்டி பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ கிராம் இஞ்சியின் சில்லறை விலை 4,800 ரூபாவாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, ஒரு கிலோ கிராம் எலுமிச்சையின் விலை 1,800 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. (அ)

# மியன்மாரில் சிக்குண்ட இலங்கையர்களை மீட்கத் தாய்லாந்துடன் கைகோக்கும் அரசு

கொழும்பு, மே. 28

மியன்மார் சைபர் குற்ற வலயத்தில் சிக்குண்டுள்ள இலங்கையர்களை மீட்பதற்கான ராஜதந்திரமட்ட பேச்சுவார்த்தை நிமித்தம் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று தாய்லாந்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

அந்தவகையில் பாராளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார, ஜே.சி. அலவத்துவல மற்றும் சுஜித் சஞ்சய் பெரேரா ஆகியோர் நேற்று அதிகாலை நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

குறித்த குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று அதிகாலை 01.10 அளவில் சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானமான மூடாக தாய்லாந்தின் பாங்கொக் நோக்கிச் சென்றுள்ளனர்.

மியன்மார் சைபர் குற்றவலயத்தில் சிக்குண்டுள்ள இலங்கையர்களை மீட்பது தொடர்பாக மியன்மார் மற்றும் ரஷ்யாவில் 5 நாட்கள் தங்கியிருந்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினர் தாய்லாந்து மற்றும் மியான்மார் மகாநாயக்கர்கள் மற்றும் ரஷ்ய தூதரக அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெலிகமவில் துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, மே. 28

மாத்தறை வெலிகம படவல பகுதியில் அடையாளம் தெரியாத நபர்களினால் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

எனினும் குறித்த துப்பாக்கிப் பிரயோகத்தினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதனிடையே அஹங்கல்ல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொஸ்கொட பொலிஸாரினால் நேற்று முன் தினம் இரவு குறித்த சந்தேக நபரை கைது செய்யப்பட்டுள்ளார்.

நில்லபதன பகுதியைச் சேர்ந்த 36 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தே கநபர் கடந்த 8 ஆம் திகதி அஹூங்கல்ல போக ஹபிட்டிய பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து நபர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டு கொலை செய்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

# 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை விண்ணப்பம் நேற்று முதல் ஏற்பு

கொழும்பு, மே. 28

2024ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான இணையவழி ஊடான விண்ணப்பங்கள் நேற்று முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெறவுள்ளது.

இந்தநிலையில், குறித்த பரீட்சைக்கான விண்ணப்பங்களை நேற்று முதல் ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை இணையவழி ஊடாக சமர்ப்பிக்க முடியும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேநேரம் எந்தவித காரணங்களுக்காகவும் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது எனவும் பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# சுங்க திணைக்களத்தில் தொழில் தருவதாகக் கூறி பணம் மோசடி!

கொழும்பு, மே. 28

சுங்கத் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி பலர் நிதி மோசடியில் ஈடுபடும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுங்கத் திணைக்களம் அறிவித்துள்ளது.

சுங்கத் திணைக்களத்தில் உதவி அத்தியட்சகர்கள் மற்றும் சுங்கப் பரிசோதகர்கள் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ள தாகத் தெரிவித்து குறித்த மோசடியாளர்கள் ஆட்சேர்ப்பில் ஈடுபடும் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோசடியில் ஈடுபடுபவர்கள் விண்ணப்பதாரர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு பதவிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த நிலையில் சுங்கத் திணைக்களத்தின் நடைமுறைக்குப் புறம்பாக எந்த அதிகாரிகளையும் உள்வாங்க முடியாது என சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வீதியை மூடி வேலி அடைத்த புலம்பெயர் தமிழர் நிறுவனம்!

## அதனை அப்புறப்படுத்தி மீனவர்கள் போராட்டம்

முல்லைத்தீவு, மே. 28

**முல்லைத்தீவு சிலாவத்தை தியோகுநகர் மீனவர்கள் பல வருடங்களாக பயன்படுத்தி வந்த தொழிலுக்காக கடற்கரைக்கு சென்றுவரும் வீதியை அப்பகுதியில் ஹோட்டல் ஒன்றை அமைத்துவரும் கனேடிய புலம்பெயர் தமிழர் ஒருவருக்கு சொந்தமான தனி யார் நிறுவனம் ஒன்று அடத்தாக நேற்றுமுன்தினம் வேலி போட்டு மூடி உள்ளது.**

இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி மீனவர்கள் தாம் தொழிலுக்காக கடலுக்கு சென்றுவரும் பல ஆண்டுகளாக பயன்படுத்தும் பாவனையில் உள்ள வீதியை மூடி அடைத்து அடாவடி செய்யும் நிறுவனத் திற்கு எதிராக தொடர் போராட்டத்தில் குதித்துள்ள தோடு வீதியை மூடி அடைக் கப்பட்ட வேலியையும் உடைத்து எறிந்துள்ளனர்.



இதனையடுத்து தனியார் நிறுவனத்தால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அப்பகுதிக்கு வருகை தந்த முல் லைத்தீவு பொலிஸார் மீனவர் களிடம் விசாரணை மேற் கொண்டதோடு நேற்று மீனவர் களில் ஐந்து பேரை முல்லைத் தீவு பொலிஸ் நிலையத்துக்கு வருகைதருமாறு அழைத்துள்ள னர். சம்பவ இடத்துக்கு சென்ற முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் மீனவர்களோடு கலந்துரையாடி நிலைமைகளை நேரில் பார்வை யிட்டார்.

இந்த தனியார் நிறுவனம், தம்முடன் முரண்பாடுகளை ஏற்படுத்துவதோடு மீனவர் களின் தொழிலுக்கும் இடை யூறுகளை ஏற்படுத்தி அடாவ டியில் ஈடுபட்டு வருவதாக முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் உள்ள தியோகுநகர் பகுதி மீனவர்கள் குற்றம்சாட்டி யுள்ளனர்.

இந்த நிறுவனத்துக்கு முல் லைத்தீவில் பாதுகாப்பு தரப் பினர் மற்றும் அரச திணைக் களங்களின் அதிகாரிகளின் ஆதரவும் பலமாக இருப்பதாக கிராம மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (அ)

# பிரான்ஸ் தூதுவரின் இறுதிச்சடங்கு; இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை



கொழும்பு, மே. 28

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவரின் மரணம் தொடர் பில் இறுதி முடிவு இதுவரை எடுக்கப்படவில்லை என பிரான்ஸ் தூதரகம் தெரிவித் துள்ளது.

அவரது இறுதிக் கிரியைகள் இலங்கையில் நடைபெறுமா அல்லது அவரது உடல் பிரான் ஸூக்கு எடுத்துச் செல்லப் படுமா என்பது குறித்து நேற்று இறுதித் தீர்மானம் எடுக்கப் படும் என தூதரகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் ஜீன் பிராங்கோய்ஸ் பக்டெட் இராஜகிரியில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல் லத்தில் உயிரிழந்த நிலையில், நேற்று முன் தினம் பிற்பகல் வெலிக்கடை பொலிஸ் அதி காரிகள் குழுவினால் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

திடீர் சுகவீனம் காரணமாக அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனது 56 ஆவது வயதில் பிரான்ஸ் தூதுவர் இவ்வாறு உயிரிழந்தார்.

1970 ஆம் ஆண்டு பிறந்த ஜீன் பிராங்கோய்ஸ் பக்டெட், 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவராக கடமையாற்றி வந் தார்.

தொழில் ரீதியான இராஜதந் திரியான அவர் முன்னர் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சகத்தில் கலாசாரம் மற்றும் கல்விக்கான துணை இயக்குநர் போன்ற பதவிகளை வகித்தார். (அ)

# மின்சாரம் தாக்கி பெண் பலி!

கொழும்பு, மே. 28

ஹொரணை பொலிஸ் பிரி விற்குட்பட்ட அபகஹவத்த பகுதியில் மின்சாரம் தாக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள் ளதாக ஹொரணை பொலிஸார் தெரிவித்தனர்.

அபகஹவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 78 வயது பெண்ணொ ருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மின் கம்பத்திலிருந்த மின் சாரக் கம்பிகள் தரையில் வீழ்ந்து கிடந்த நிலையில் குறித்த பெண் அந்த மின்சாரக் கம்பிக ளில் சிக்கியதில் இவ்வாறு மின்சாரம் தாக்கி உயிரிழந்துள் ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் ஹொரணை வைத்தியசாலை யில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரி வித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹொரணை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (அ)

# இலங்கையின் காரீயச் சுரங்கங்களில் முதலீடு செய்ய உலக நாடுகள் போட்டி

கொழும்பு, மே. 28

இலங்கையின் மூலோபாய வளங்கள் சொத்துக்கள் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வருவதற்கான மற்றுமொரு உதாரணங்களாக இலங்கையின் காரீய சுரங்கங்களில் முதலீடு செய்வதற்கு இந்தியா, சீனா, பிரான்ஸ்,அமெரிக்கா ஆகிய நாடுகள் போட்டியிடுகின்றன.

ஏற்கனவே இந்த தொழில் துறையில் கனடா, அவுஸ்திரே லியா நிறுவனங்கள் தங்களை ஈடுபடுத்தியுள்ள நிலையிலேயே இந்தியா,சீனா,அமெரிக்கா போன்ற நாடுகள் முதலீடு செய் வதற்கான ஆர்வத்தை வெளி யிட்டுள்ளன.

இலங்கையில் உயர்தர காரீ யம் காணப்படுவதாக நிபுணர் கள் தெரிவிக்கின்றனர்.

புவியியல் மற்றும் சுரங்க ஆய்வு பணியகத்தின் பணிப்பா ளர் நாயகம் பேராசிரியர் ரஞ் சித் பிரேமசிறி இந்தியா, சீனா உட்பட பல வெளிநாடுகள் இந்த துறையில் முதலீடு செய்ய ஆர்வமாகவுள்ளதாக தெரிவித் துள்ளார்.

யார் அதிகபட்ச மதிப்புக் கூட்டலில் ஈடுபடுகின்றார்கள், மேம்பட்ட தொழில்துறைகளிற் காக பயன்படுத்துகின்றார்கள் என்பதை பார்க்கவேண்டும். இலங்கையில் கைவிடப்பட்ட 3000 சுரங்கங்கள் உள்ளன. நாங் கள் அதிகமாக கோரலாம் என அவர் தெரிவித்தார்.

இலங்கையில் காரீய தொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கான சாத்தியப்பாடு கள் தொடர்பில் இலங்கையும் இந்தியாவும் ஆராய்ந்துள்ளன. (அ)

# ஆனைவிழுந்தான் சரணாலயத்தில் நூற்றுக்கணக்கான பறவைகள், மீன்களின் உயிரிழப்பு குறித்து விசாரணை

கொழும்பு, மே. 28

கடந்த சில நாட்களாக ரம்சா சதுப்பு நிலமான ஆனை விழுந்தான் சரணாலயத்தில் நூற்றுக்கணக்கான பறவைகள் மற்றும் மீன்கள் உயிரிழந்துள் ளன.

சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த இடமான ஆனை விழுந்தான் சரணாலயத்தில் இக்காலப்பகுதியில் இடம் பெயர்ந்து வரும் பறவைகள் சுதந்திரமாக வாழ்ந்து இனப் பெருக்கம் செய்யும்.

இந்நிலையில், அப்பகுதியி லுள்ள தொழிற்சாலை ஒன்றிலி ருந்து கொட்டப்படும் இரசா யனக் கழிவுகளால் பறவைகள் மற்றும் மீன்கள் இவ்வாறு உயிரிழந்திருக்கலாம் என அவர்கள் தெரிவிக்கின்ற னர்.

உயிரிழந்த மீன்கள் மற்றும் பறவைகளின் மாதிரிகள் பரி சோதனைக்காக பேராதனை சிறப்பு கால்நடை மருத்துவப் பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட் டுள்ளன. ஆய்வக பரிசோதனை முடிவுகள் இன்னும் வரவில்லை வன விலங்கு வட்டார பாது காவலர் டபிள்யூ.எல் உபநந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாசிகளை அகற்றுவதில் அலட்சியம் காட் டப்படுவதால் நீர்நிலைகள் மாசுபட்டுள்ளதாகவும், இதன் விளைவாக மீன்கள் மற்றும் பறவைகள் உயிரிழப்பதாகவும் நீர் உயிரினவளர்ப்பு அபிவி ருத்தி அதிகாரசபையின் அதி காரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# பிரசவத்தின்போது உயிரிழந்த சிசுவின் சடலத்தை எமக்கு காண்பிக்கவில்லை!

## உறவினர்கள் குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 28

பிரசவத்தின் போது உயிரிழந்ததாக கூறப்படும் குழந்தையின் சடலத்தை தமக்கு காட்டுவதற்கு மாத்தறை புதிய மாவட்ட வைத்தியசாலையின் பணிக் குழாமினர் நடவடிக்கை எடுக்கவில்லை எனஅந்த குழந்தையின் உறவினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சடலம் தொடர்பில் வைத்திய சாலைப் பணிக்குழாமினர் மூன்று தடவைகள் முன்னுக்கு பின் முரணான கருத்துக்களை வெளியிட்டமை தொடர் பில் பலத்த சந்தேகம் நிலவுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

மாத்தறை வெலிகம பகுதியைச் சேர்ந்த 24 வயதான காவிந்தியா மதுஷ ானி தனது முதல் குழந்தையைப் பிரச விப்பதற்காக மாத்தறை புதிய மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 22ஆம் திகதி அனுமதிக்கப்பட்டார்.

மதுஷானி அந்த மருத்துவமனையில் சேவையாற்றும் மகப்பேற்று மருத்துவர் ஒருவரிடம் தனியார் மருத்துவ மையத் தில் மருத்துவ பரிசோதனை செய்துள்ள நிலையில் பிரசவத்திற்காக அந்த மருத் துவமனை தேர்வு செய்யப்பட்டது.

பிரசவத்திற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அன்று நடத்தப் பட்ட ஸ்கான் மற்றும் அதற்கு முன்னர் தனியார் சிகிச்சை மையத்தில் நடத்தப் பட்ட மருத்துவப் பரிசோதனையிலும் வயிற்றில் குழந்தை ஆரோக்கியமாக இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட மதுஷானி சுகப்பிரசவம் மூலம் குழந்தை யைப் பெற்றெடுத்துள்ளபோதும், பின்னர் குழந்தை இறந்ததாக மருத்துவ மனை அதிகாரிகள் அறிவித்துள்ள னர்.

இதற்கமைய வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ள சடலத்தை அடக்கம் செய்ததற்காக மாத்தறை மாநகர சபைக்கு 2500 ரூபாய் பணம் செலுத்தி பற்றுச்சீட்டை கொண்டு வரு மாறு வைத்தியசாலை பணிக்குழாமினர் உறவினர்களிடம் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, உரிய தொகையை மாநகர சபைக்கு செலுத்த நடவடிக்கை எடுத்தி ருந்தனர்.

எனினும் குழந்தையின் சடலத்தை தந்தையிடம் காட்டாமல் புதைத்தமை தொடர்பில் வைத்தியசாலை ஊழியர்க ளிடம் உறவினர்கள் வினவிய போது சடலம் கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக தெரிவித்தனர்.

உயிரிழந்த குழந்தையின் சடலத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் உறவினர் கள் நேற்று முன்தினம் இரவு வரை வைத்தியசாலையில் காத்திருந்த போதி லும் வைத்தியசாலை பணிக்குழாமினர் எவரும் சடலம் தொடர்பில் உறுதியான அறிவிப்பை வெளியிடவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இச்சம்பவம் தொடர்பில் வைத்திய சாலை அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வினவ முற்பட்ட போதும் எவரும் அதற்கு பதில் அளிக்க வில்லை. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது வேட்பாளர் குறித்து யாழில் ஜுன் 9 கருத்து பரிமாற்ற நிகழ்வு

## சுமந்திரன் எம்.பியின் ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம், மே. 28

**பொது வேட்பாளர் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் கருத்துப் பரிமாற்ற நிகழ்வொன்றை ஜுன் 9ஆம் திகதி நடத்தவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

யாழ்.ஊடக மையத்தில் நேற்று திங்கட்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொது வேட்பாளர் தொடர்பிலான முன்னெடுப்புக்களை முன்னெடுத்துவரும் சிவில் சமூக பிரதிநிதிகள், பத்திரிகை எழுத்தாளர்கள் உள்ளிட்டவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் என்னை நேரில் சந்தித்துக் கதைத்தார்கள்.

அதன் போது போது, பொது வேட்பாளர் தொடர்பிலான எனது நிலைப்பாட்டை அவர்களுக்கு கூறினேன். அவர்களும், பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பிலான தமது கருத்துக்களையும் கூறினார்கள்.

அப்போது நான் கூறினேன், பொது வேட்பாளர் தொடர்பில் பொது வெளியில் கருத்துக்களை பரிமாறும் நிகழ்வினை நடத்தி, அதில் ஆரோக்கியமான கலந்துரையாடலை நடத்துவோம் என்றேன். அதற்கு அவர்களுக்கும் சம்மதித்தர்கள்.

மேலும், யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஜுன் 09ஆம் திகதி பொது வேட்பாளர் தொடர்பில் கருத்துக்களை பரிமாறும் நிகழ்விற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டாது, இவர் அவரின் ஆள் இவரின் ஆள் என தாக்கிப் பேசாது தமது கருத்துக்களை முன் வைத்து ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றால் மக்களுக்கும் தெளிவு கிடைக்கும். அதற்காகவே அந்நிகழ்வை ஒழுங்கமைத்துள்ளேன் - என்றார். (அ)

# மன்னாரில் முன்னறிவித்தலின்றி குடிதண்ணீர் விநியோகம் தடை!

## மக்கள் அசௌகரியம்

மன்னார், மே. 28

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊடாக வினியோகிக்கப்பட்டு வரும் குழாய் நீர் விநியோகம் எவ்வித முன் அறிவித்தல் இன்றி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை முதல் தடைப்பட்டுள்ளமையால் மன்னார் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இதனால் மன்னார் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மன்னார் நகரப் பகுதியில் உள்ள அதிகமான மக்கள் தமது வீடுகளுக்கு மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிதண்ணீர் இணைப்பை பெற்று தமது குடிதண்ணீர் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றனர்.

அண்மைக் காலமாக முன் அறிவித்தல் வழங்கப்பட்ட பின்னர் குடிதண்ணீர் விநியோகம் தடை செய்யப்படும்.

எனினும் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் நீர் விநியோகம் எவ்வித அறிவித்தலும் இன்றி தடை செய்யப்பட்டது.

இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கான பொறியியலாளர் ஒருவர் நிரந்தரமாக இல்லாத நிலையில் பல்வேறு பிரச்சனைகள் இடம் பெற்று வருவதாகவும் தெரிய வருகிறது. (அ)

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு இந்த வார இறுதியில் வெளிவரும்

கொழும்பு, மே. 28

**2023 ஆம் ஆண்டிற்கான கல்வி பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இந்த வார இறுதியில் வெளியிடப்படும் என பரீட்சை திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

அதேவேளை பரீட்சை பெறுபேறுகளை வெளியிடும் நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை 281,445 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65, 531 தனியார் விண்ணப்பதாரர்களும் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை இன்று அல்லது நாளை பெறுபேறுகள் வெளியாகும் என்ற சமூக வலைத்தளங்களில் வெளியிடப்படும் உறுதிப்படுத்தப்படாத தகவல்களை நம்ப வேண்டாம் என பரீட்சைகள் திணைக்களம் மேலும் கூறியுள்ளது. (அ)

# 4720 தன்சல்கள் பதிவு இல்லை!

கொழும்பு, மே. 28

வெசாக் பௌர்ணமியை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட தன்சல்களில் 4720 தன்சல்கள் உள்ளூர் சுகாதார மற்றும் வைத்திய அதிகாரி அலுவலகங்களில் பதிவு செய்யப்படவில்லை என தெரியவந்துள்ளது.

மேலும் 7980 தன்சல்கள் பொது சுகாதார பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டுள்ளன. ஆனால் உள்ளூர் சுகாதார மற்றும் மருத்துவ அலுவலகங்களில் **3260** தன்சல்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் **1744** பானம் வழங்கும் தன்சல்கள் மற்றும் **1516** உணவு தன்சல்கள் ஆகும்.

**892** தன்சல்களில் குறைபாடுகள் காணப்பட்டதாகவும், அவற்றை நிவர்த்தி செய்யுமாறும் பொது சுகாதார பரிசோதகர்கள் ஏற்பாட்டாளர்களுக்கு அறிவித்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# சட்டவிரோதமாக புதையல் தோண்டிய இருவர் கைது!

கொழும்பு, மே. 28

மாத்தளை, மகுலுகஸ்வெவ பிரதேசத்தில் சட்டவிரோதமாகப் புதையல் தோண்டியதாகக் கூறப்படும் இரண்டு சந்தேக நபர்கள் கலேவெல பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கலேவெல பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மாவத்தகம, பபுரகஸ்வெவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 38 மற்றும் 70 வயதுடைய இரண்டு நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் பூசைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கலேவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பாதாளக் கும்பலை சேர்ந்த களு துஷாரவின் மகன் உட்பட 4 பேர் துப்பாக்கியுடன் கைது!

கொழும்பு, மே. 28

பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த களு துஷாரவின் மகன் உட்பட நால்வர் துப்பாக்கியுடன் மாத்தறை குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை குற்றத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மாத்தறை பிக்வெல்ல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதை மாத்திரைகள் அடங்கிய பொதியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மஹரகம களு துஷார என்பவர் வெலிகடை சிறைச்சாலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில், பாதாள உலக கும்பலைச் சேர்ந்த மஹரகம களு துஷாரவின் 24 வயது மகனும் அவரது மூன்று நண்பர்களும் விருந்தொன்றை ஏற்பாடு செய்வதற்காகவும் துப்பாக்கியைச் சரி செய்வது தொடர்பாகவும் கொழும்பிலிருந்து மாத்தறைக்கு சென்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

(அ)

# உயிர் சேதத்தை தடுக்க மருந்துகளின் தரம் பரிசோதிக்கப்படுதல்வேண்டும்!

## வைத்தியர் சமல் சஞ்சீவ கருத்து

கொழும்பு, மே. 28

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் பதவிக்காலத்தில் முறையான பதிவுகள் இன்றி, மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருந்துகளின் தரம் சரிபார்க்கப்படாமல் 306 தடவைகள் இலங்கைக்கு மருந்துகள் கொண்டுவரப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது குறித்த மருந்துகள் வைத்தியசாலைகளில் பயன்பாட்டிலுள்ள நிலையில் வெகு விரைவில் அவற்றை சோதனைக்கு உட்படுத்துமாறு வைத்தியர் சமல் சஞ்சீவ தெரிவித்தார்.

அவ்வாறு இல்லையெனில் குறித்த மருந்துகள் மூலம் மேலும் உயிர் சேதங்கள் ஏற்படலாம் எனவும் அவர் கூறினார்.

அண்மையில், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நுண்ணுயிர் எதிர்ப்பியின் ஒவ்வாமை காரணமாக நோயாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு முன்னாள் சுகாதார நிர்வாகத்தின் மூலம் தரத்தை பரிசோதிக்காமல் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளை தொடர்ந்தும் பயன்படுத்தி உயிர் சேதங்கள் ஏற்படுவதை தடுக்க தற்போதைய சுகாதார நிர்வாகிகள் மருந்துகளின் தரத்தை சரிபார்க்க உத்திகளைப் பயன்படுத்த வேண்டும் எனவும் வைத்தியர் சமல் சஞ்சீவ வலியுறுத்தினார்.

மேலும், இலவச சுகாதார சேவை இனி பாதுகாப்பானது அல்ல என அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பிரகாரம், போதியளவு மருந்து விநியோகம் இருக்கும் போது, சுமார் 65 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துகளை மீள இறக்குமதி செய்யுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தை புறக்கணித்து உத்தரவுகளை சமர்ப்பித்துள்ளமை தொடர்பில் மருந்துவ விநியோகப் பிரிவு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த மோசடிகள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை விரைவில் நியமிக்க வேண்டியது ஜனாதிபதியின் பொறுப்பு.

கடந்த காலத்தில் 30 நிறுவனங்களுக்கு முறையான பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றாமல் அல்லது தர பரிசோதனைகள் இன்றி மருந்துகளை இலங்கைக்கு கொண்டு வர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நோயாளர்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கும் போது அத்தியாவசியமற்ற மருந்துகளை கூட அத்தியாவசிய மருந்துகளாக இலங்கைக்கு கொண்டு வருவதற்கு முன்னாள் சுகாதார செயலாளர் மற்றும் அவரது குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார் - என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அம்பாறையில் சிறப்புற நடைபெற்ற மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை

## பல அரசியல் பிரதிநிதிகள் மக்கள் பங்கேற்பு

காரைதீவு, மே. 28

**தூய்மையான அரசியலுக்காக ஒன்றிணைவோம் எனும் தொனிப் பொருளில் அம்பாறை மாவட்ட மார்ச் 12 இயக்கத்துடன் பவ்ரல் இயக்கம் இணைந்து ஏற்பாடு செய்த மக்கள் மேடை நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை காரைதீவு பாபா ரோயல்ஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.**

மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்ட தலைவர் கந்தையா சத்தியநாதன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அரசியல் கட்சி மற்றும் பொது சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் 153 பேர் கலந்து கொண்டனர்.

முன்னதாக மார்ச் 12 இயக்கத்தின் தோற்றம் செயற்பாடு தொடர்பாக காணொளி காண்பிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட தரவுகள் தொடர்பாக பவ்ரல் இயக்கத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் இஷத் இன்காம் உரையாற்றினார்.

நிகழ்ச்சிதொடர்பாக சொர்ணலிங்கம் சந்திரசிறி ஆகியோர் விளக்கவுரை நிகழ்த்தினார்கள்.

இதன்போது அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக்ச, காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கட்சி பிரதிநிதிகள் மூவர் கலந்து கொண்டு கருத்துரைத்தனர்.

பொதுமக்கள் பிரதிநிதிகளும் கேள்விகள் தொடுத்தனர். அதற்கு அரசியல் பிரமுகர்கள் பதிலளித்தனர்.

மார்ச் 12 இயக்கத்தின் மாவட்ட பிரதிநிதி வி.ரி.சகாதேவராஜா நிகழ்வை நெறிப்படுத்தி தொகுத்து வழங்கினார்.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தும் மாவட்டத்தின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. சில கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

இதன்போது அம்பாறை மாவட்ட சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதேசம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்னைகள் சவால்கள் குறித்து பிரதிநிதிகள் பேசினார்கள். மக்களும் பேசினார்கள்.

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் எரியும் பிரச்னையான கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பாகவும் பேசப்பட்டது. (அ)

# புணானைப் பகுதியில் பயணித்த கார் விபத்து



மட்டக்களப்பு, மே. 28

ஓட்டமாவடியைச் சேர்ந்த குடும்பமொன்று காரில் கொழும்பு சென்று திரும்பி வரும் வழியில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை புணானை தொழில்நுட்ப பல்கலைக்கழக பகுதியில் வைத்து அவர்கள் பயணித்த கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கார் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகியதாலேயே கார் குடை சாய்ந்து குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஓய்வுபெற்ற ஆசிரியைகளுக்கு சேவை நலன் பாராட்டு விழா



திருமலை, மே. 28

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் கல்விப் பணியினை மிகவும் சிறப்புடன் மேற்கொண்டு ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி. ஜெயவரதராணி சுவேந்திரன், செல்வி. வடிவம்பாள் செல்லக்கண்டு மற்றும் திருமதி. பயஸ் அமலநாதன் ஆகிய ஆசிரியைகளுக்கான பிரியாவிடை வைபவம் அண்மையில் இடம் பெற்றது.

கல்லூரி அதிபர் என்.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மாணவர்களால் ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியைகள் மாலையிட்டு வரவேற்கப்பட்டனர். (அ)

# ஆரம்ப பிரிவு மாணவரின் புதிய மேலங்கி அறிமுகம்



கல்முனை, மே. 28

கல்முனை கல்வி வலய கல்முனை இஸ்லாமாபாத் மகா வித்தியாலய தரம் 1-5 வரையான மாணவர்களின் சீருடையில் முதற் தடவையாக மாற்றம் ஒன்றை ஏற்படுத்த தீர்மானித்து அதற்கமைவாக நேற்று மாணவர்களுக்கான மேலங்கி அணிவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஜீ.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது.

அதிபரின் ஆலோசனை வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர், பகுதித் தலைவர்கள், மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# கடலரிப்பினால் ஆபத்தில் கல்முனை சிறுவர் பூங்கா!

அம்பாறை, மே. 28

அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேசத்தில் கடலரிப்பின் வேகம் மீண்டும் அதிகரித்துள்ளதால் பொது மக்கள் பொழுதுபோக்கிற்காக ஒன்று கூடும் கல்முனை கடற்கரை சிறுவர் பூங்கா என அழைக்கப்படும் பகுதி பாதிப்புக்குள்ளாகி வருவதை அவதானிக்க முடிகின்றது.

கடற்கரை சிறுவர் பூங்காவில் காணப்படும் தடுப்பு சுவரின் ஒரு பகுதி கடலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளதுடன், மேலும் கடலரிப்பு அதிகரிக்குமிடத்து பூரணமாக தடுப்பு சுவர் விழும் நிலையில் உள்ளதுடன் அங்கு அமைக்கப்பட்டுள்ள கட்டடங்களும், அருகில் உள்ள மீனவர் ஓய்வு அறை கட்டடமும் மீன்பிடி வாடிகளும் பாதிப்புக்குள்ளாகும் நிலையில் காணப்படுகின்றது.

கடலரிப்பு காரணமாக கடலுக்குள் காணப்படும் கட்டட இடிபாடுகள் காரணமாக குறிப்பாக கரைவலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கிழக்கு மாகாண ஆசிரியர் நியமனத்தில் முறைகேடு!

## ஆளுநருக்கு மகஜர் கையளிப்பு வழக்குத் தாக்கல் செய்யவும் நடவடிக்கை

கல்முனை, மே. 28

கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கான தேர்வில் பெரும் முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாக தெரிவித்துள்ள கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவை, இதனை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் மகஜர் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பேரவையின் செயலாளர் செயிட் ஆஷிப் மேலும் தெரிவிக்கையில்

கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஜி.சி.ஈ. உயர்தர பாடங்களுக்கான ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்தது.

இப்பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக குறித்த நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சை கடந்த வாரம் இடம்பெற்ற நிலையில், இதன் மூலம் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல் கடந்த ஞாயிற்றுக் கிழமை கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கிறது.

அத்துடன் இம்மாதம் 28ஆம் திகதி செவ்வாய் தொடக்கம் இவர்களுக்கான ஆசிரியர் நியமனம் வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எனினும் இத்தெரிவில் பெரும் முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாகவும் இதனால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் கவலையடைந்துள்ளனர்.

குறித்த நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடாமல் நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியல் மாத்திரமே வெளியிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு நியமனம் வழங்கும் முறையானது சட்டத்திற்கு முரணானது என்று- கிழக்கிலங்கை முஸ்லிம் பேரவையின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை இம்முறைகேடு தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிடுவதற்கும் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் குறித்த நியமனத்தில் அநீதியிழைக்கப்பட்டு, பாதிக்கப்பட்டிருப்பதாக கருதும் பட்டதாரிகள் அனைவரும் 0777497979 எனும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் தம்மை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் சட்டத்தரணி எம்.எம்.ஆஸாத் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் இவ்விவகாரத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதுடன் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் குறித்த நேர்முகப் பரீட்சையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் குளறுபடிகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்விச் சாதனையாளர்களின் கௌரவிப்பு நற்பிட்டிமுனையில்

காரைதீவு, மே. 28

நற்பிட்டிமுனை ஸ்ரீ கணே சராலயம் சேனைக் குடியிருப்பு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய நிர்வாக சபை இணைந்து நடத்திய மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக் கான சீருடை வழங்கும் நிகழ் வானது ஆலய தலைவர் த. ரவிராஜ் தலைமையில் நேற்று முன்தினம் நற்பிட்டிமுனை சுமங்கலி மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்விற்கு அதிதிகளாக கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரம்சின் பக் கீர், பெரிய நீலாவணை விசேட அதிரடிப்படை தலைமை அதிகாரி சி.எஸ். ரத்நாயக்க, மற்றும் அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு. ஜெயராஜி, நற்பிட்டிமுனை ஆலயங்களின் தலைவர்கள், செயலாளர்கள்,பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரி யர்கள்,பொது அமைப்புக்கள் விளையாட்டு கழகங்கள், என பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் தரம் 5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை, க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை, உயர்தர பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களுக்கான நினைவுச் சின்னம் பணப்பரிசில் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு சீருடையினை நிதிப் பங்க ளிப்பினை ஏ. யோகராஜ், கே.தேவகுமார் ஆகியோர் வழங்கிருந்தனர்.

மேலும் வருகை தந்த அதிதி களினால் மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்கள் மற்றும் பணப் பரிசுகள் வழங்கி கௌர விக்கப் பட்டமை குறிப்பி டத்தக்கது. (அ)

## மொட்டு கட்சியின் அமைச்சர்கள் இருவருக்கு இடையில் கைகலப்பு?

கொழும்பு, மே. 28

பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான இரவு விருந்துபசாரம் ஒன்றின்போது இராஜாங்க அமைச்சர்களான பிரசன்ன ரணவீர மற்றும் லொஹான் ரத்வத்த ஆகியோருக்கு இடையில் சிறு கைகலப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலை யத்தில் அண்மையில் நடந்த சம்பவத்தில் ரணவீரவின் ஈடுபாடு குறித்து லொஹான் ரத்வத்த கேள்வி எழுப்பியபோதே இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்த சம்பவம் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவதூறான செயல் என்று லொஹான் ரத் வத்த கூறியமையே கைகலப்புக்கு காரணமாக அமைந்துள்ளது.

எனினும், அனுராதபுரம் சிறைச் சாலையில் கைதி ஒருவரை நோக்கி ரத்வத்த கைத்துப்பாக்கி யைக் காட்டி மிரட்டிய சம்பவம்கூட பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு இழுக்கை தரும் செயல் என்று ரணவீர பதிலுக்கு தெரிவித்துள்ளார். (அ)

## தாந்தாமலை மலைப்பிள்ளையாருக்கு ஜூன் 3ஆம் திகதி மகா கும்பாபிஷேகம்


காரைதீவு, மே. 28

கிழக்கிலங்கையில் வர லாற்று பிரசித்தி பெற்ற மட் டக்களப்பு மண்முனை தென்மேற்கு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய மலைப் பிள்ளையாருக்கான மகா கும்பாபிசேகம் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அதனை முன்னிட்டு எதிர்வரும் 30ஆம்,31 ஆம் திகதிகளில் கிரியைகள் ஆரம்ப மாகின்றன .

முதலாம், இரண்டாம் திகதிகளில் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும் .

தொடர்ந்து மறுநாள் 03 ஆம் திகதி கும்பாபிசேகம் நடைபெறவுள்ளதாக ஆலய



பரிபாலன சபையினர் தெரி வித்தனர்.

குறித்த காலங்களில் விசேட பொதுப்போக்குவரத்துச் சேவைகளும் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

மேலும் அடியார்களுக்கு ஆலய அன்னதான சபையின ரால் அன்னதான ஒழுங்கும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா கவும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# இறுதிப் போட்டியில் மோசமான சாதனை

### 114 ஓட்டங்களுக்குள் சுருண்டது சன்ரைசர்ஸ்

சென்னை, மே 28

இறுதிப் போட்டியில் குறைந்த ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்த சன்ரைசர்ஸ் அணி, மோசமான சாதனையுடன் சம்பியனாகும் வாய்ப்பையும் தவறவிட்டது.

ஐ. பி. எல். ரி - 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி மூன்றாவது முறையாக சம்பியனானது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.


சென்னை சேப்பாக்கம் எம். ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி வீரர்கள், கொல்கத்தா அணியின் பந்து வீச்சை தாக்குப் பிடிக்க முடியாமல் 18. 3 ஓவர்களில் 113 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தனர்.

மிட்செல் ஸ்டார்க் முதல் ஓவரிலேயே தனது ஸ்விங்கால் அபிஷேக் சர்மாவின் விக்கெட்டை வீழ்த்தினார். இரண்டு ஓட்டங்கள் எடுத்தி ருந்த நிலையில் அவர் ஆட்டமிழந்தார். ஸ்டார்க் பந்தை முதல் ஓவரில் எதிர்கொள்வதைத் தவிர்த்த ட்ராவிஸ் ஹெட், வைபவ் அரோரா வீசிய இரண்டாவது ஓவரின் கடைசி பந்தில் விக்கெட்டை பறிகொடுத்து நடையைக் கட்ட ஹைதராபாத் அணி அதிர்ச்சியில் உறைந்தது.

பவர்பிளே முடிவதற்குள் ராகுல் திரிபாதியை 9 ஓட் டங்கள் எடுத்திருந் திருந்த நிலையில் வெளியேற்றினார் மிட்செல் ஸ்டார்க். இதன் பின்னர் களமிறங்கிய நிதிஷ் குமார் ரெட்டி 13 ஓட்டங்கள் எடுத்தி ருந்தபோது, ஹர்ஷி த் ராணா பந்தில் ஆட்ட மிழந்தார்.

7 ஓவர்களில் 47 ஓட்டங்க ளுக்கு 4 விக்கெட்களை இழந்த நிலையில் ஏய்டன் மார்க்ரம், ஹென்றிச் கிளாசன் ஜோடி சற்று நம்பிக்கையளிக்கும் வகையில் விளையாட முயற்சித் தது.இருப்பினும் இந்த இணையால் வெகுநேரம் நீடிக்கவில்லை. எய்டன் மார்க்ரம் 20 ரன்களில் ஆந்த்ரே ரஸ்ஸல் பந்தை லாங் ஆன் திசையில் தூக்கி அடிக்க மிட்செல் ஸ்டார்க்கிடம் கேட்ச் ஆனது. இதன் பின்னர் சீரான இடைவெளியில் ஹைதராபாத் அணி விக்கெட்டை இழந் தது.

ஷபாஷ் அகமது 8 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வருண் சக்ரவர்த்தி பந்தில்




வெளியேறினார். தொடர்ந்து அப்துல் சமத் 4 ஓட்டங்கள் எடுத்தபோது அண்ட்ரு ரஸல் பந்தில் விக்கெட்டை பறிகொடுத்தார். ஹென்ரிச் கிளாசன் 16 ஓட்டங்களில் ஹர்ஷித் ராணா பந்தில் ஆட்ட மிழந்தார். ஜெயதேவ் உனத்கட் 4 ஓட்டங்களில் சுனில் நரேன் பந்தில் ஆட்டமிழந்தார். இறுதிக் கட்ட ஓவர்களில் அதிரடியாகத் துடுப்பெடுத் தாடிய பாட் கம்மின்ஸ் 19 பந்துகளில் ஒரு சிக்ஸர், 2 பௌண்ட்ரிகளுடன் 24 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கடைசி விக்கெட்டாக ரஸல் பந்தில் பெவிலியன் திரும்பி னார்.


கொல்கத்தா அணி தரப்பில் அண்ட்ரு ரஸல் 3 விக்கெட் களை வீழ்த்தினார். மிட்செல் ஸ்டார்க், ஹர்ஷித் ராணா ஆகியோர் தலா 2 விக்கெட்க ளையும் வைபவ் அரோரா, சுனில் நரேன், வருண் சக்ர வர்த்தி ஆகியோர் தலா ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினர்.

114 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 10. 3 ஓவர்களில் 2 விக் கெட்கள் இழப்புக்கு 114 ஓட் டங்கள் எடுத்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வெங்கடேஷ் ஐயர் 26 பந்துகளில் 4 பௌண்ட் ரிகள், 3 சிக்ஸர்களுடன் 52 ஓட்டங்களும் அணித் தலைவர் ஸ்ரேயஸ் ஐயர் 6 ஓட்டங்களும் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். முன்னதாக சுனில் நரேன் 6 ஓட்டங்களில் பாட் கம்மின்ஸ் பந்தில் ஆட்ட மிழந்தார். ரஹ்மனுல்லா குர் பாஸ் 32 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்க ளுடன் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷபாஷ் அகமது பந்திலும் ஆட்டமிழந்தனர்.

ஐ. பி. எல். தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி சம்பியன் பட்டம் வெல்வது இது மூன்றாவது முறையாகும். இதற்கு முன்னர் அந்த அணி 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டில் கிண்ணம் வென்றிருந்தது.

இதேவேளை, ஐ. பி. எல். இறுதிப் போட்டியில் குறைந்த ஓட்டங்கள் எடுத்த அணி என்ற மோசமான சாதனையை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி படைத்துள்ளது. இறுதிப் போட்டியில் கொல்கத்தா அணிக்கு எதிராக ஹைதராபாத் 113 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இதற்கு முன் னர் 2013ஆம் ஆண்டு இறுதிப் போட்டியில் மும்பை அணிக்கு எதிராக சென்னை அணி சேர்த்த 125 ஓட்டங்களே குறைந்தபட்ச ஓட்டங்களாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய தூதரக கண்காட்சியில் மகிந்த, கோட்டாபய பங்கேற்பு

கொழும்பு, மே 28

இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் பௌத்த கண்காட்சியை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் 'புத்தம் சரணம் கச்சாமி' கண்காட்சி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முக்கியஸ்தர்கள் இந்தக் கண்காட்சியை நேரில் பார்வையிட்டனர்.

இந்தக் கண்காட்சிய பல்லாயிரக்கணக்கான சிங்கள பொது மக்களும் பார்வையிட்டு வருகின்றனர். (ஐ)

# முன்பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்குக!

## ஜனாதிபதி ரணிலுக்கு மகஜர்

வவுனியா, மே. 28


வவுனியா வடக்கில் முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் தமக்கான சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி மகஜர் ஒன்றை இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஊடாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்ட நிலையில், அவரை சந்தித்து குறித்த மகஜரைக் கையளிப்பதற்கு ஆசிரியர்கள் முயற்சித்திருந்தனர்.

எனினும் பாதுகாப்புக் கடமையில் இருந்த உத்தியோகத்தர்களால் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஊடாக, குறித்த மகஜர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ)

# காற்றினால் பறந்தன கூரைகள் 24 குடும்பங்கள் இடம்பெயர்வு



கொழும்பு, மே. 28

தொலஸ்பாகை, குறுந்துவத்தை ராக்சாவ தோட்டத்தில் உள்ள லயன் குடியிருப்பின் கூரைகள், காற்றில் அள்ளுண்டு சென்றுள்ளன.

இதனால் குறித்த லயன் குடியிருப்பில் வசித்து வரும் 24 குடும்பங்கள் தற்போது பரணகலை தமிழ் வித்தியாலய மண்டபத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளன.

சுமார் 80 பேர்வரை பாடசாலை மண்டபத்தில் தங்கியுள்ளனர் என தெரியவருகின்றது. சீரற்ற காலநிலையால் குறித்த பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வீட்டில் உள்ள பொருட்களும் சேதமடைந்துள்ளன.

# வடக்கு-தெற்கு ஆட்சியாளர்களே இனவாதத்தை தூண்டிவிட்டனர்!

## வவுனியாவில் கூறினார் அனுரகுமார



வவுனியா, மே. 28

**இந்த நாட்டிலுள்ள வடக்கு-தெற்கு ஆட்சியாளர்களே மக்கள் மத்தியில் பாரிய இனவாதத்தை தூண்டி, மாபெரும் யுத்தத்தை உருவாக்கியதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

**மேலும், 1981இல் தேர்தலில் வெற்றி காண்பதற்காக, ரணில் விக்கிரமசிங்கவே யாழ். நூலகத்தை எரித்தார் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.**

வவுனியாவிலுள்ள இரட்டைப்பெரியகுளம் விருந்தினர் விடுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற, தேசிய மக்கள் சக்தியின் மகளிர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாடு நெருப்பாலும் வெள்ளத்தாலும் அழிந்த நாடு அல்ல. அனைத்து செல்வ செழிப்பும் நிறைந்த பொக்கிஷமே எமது நாடு.

ஆனால், இந்த மாபெரும் பொக்கிஷத்தில், உண்பதற்கும் குடிப்பதற்கும் இன்றி மக்கள் தவித்து வருகின்றனர். மருந்தின்றி இறந்து போகின்றார்கள், வீடின்றி வாழ்கின்றார்கள்.

ஆகையால், ஆட்சி செய்தவர்கள் இந்த நாட்டை வளர்க்கவில்லை.

எனவே, தேசிய மக்கள் சக்தியுடன், மக்களும் ஒன்றாக இணைந்து இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என தேசிய மக்கள் சக்தி உறுதியளிக்கிறது.

நாம் எமது நாட்டு மக்களின் வாழ்க்கையை சிறப்பாக மாற்றுவோம்.

இந்த ஆட்சியாளர்கள் மக்கள் மத்தியில் பெரும் இனவாதத்தை தூண்டி, மாபெரும் யுத்தத்தை உருவாக்கினார்கள்.

அது தானாக உருவான யுத்தம் அல்ல. வடக்கு-தெற்கிலுள்ள அரசியல்வாதிகள், அவர்களின் பதவிக்காக அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட யுக்தியினால் உருவான யுத்தம்.

பிரபாகரனால் தற்கொலை குண்டுதாரிகள் உருவாவதற்கு பிரதான இரண்டு காரணங்கள் உள்ளன.

முதலாவது, 1981 இல் அபிவிருத்திச் சபை தேர்தல். ரணில் விக்கிரமசிங்கவின் குழுவினர் யாழ்ப்பாணத்துக்குச் சென்று யாழ். நூலகத்தை எரித்தார்கள்.

தேர்தலுக்காக, வாக்குகளை பெறுவதற்காக நூலகத்தை எரித்த சம்பவத்தை நீங்கள் எங்காவது கேள்விப்பட்டதுண்டா?

வடக்கிலுள்ள தமிழ் மக்கள் வாசிப்பு பழக்கத்துடன் மிகவும் நெருக்கமானவர்கள்.

அம்மக்கள் யாழ். நூலகத்துக்குச் செல்கையில், தெய்வஸ்தலங்களுக்கு செல்வதைப் போன்று தமது காலணிகளை வெளியில் விட்டுவிட்டுச் செல்வதை நான் கண்டுள்ளேன்.

வடக்கு மக்களுக்கும் யாழ். நூலகத்துக்கும் இடையில் அவ்வாறானதொரு ஒற்றுமையிருந்தது.

ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் குழுவினர், 1981 இல் தேர்தலில் வெற்றிக்காண அந்த நூலகத்தை தீக்கிரையாக்கினார்கள்.

தெற்கிலுள்ள அரசாங்கம் தமது நூலகத்தை தீயிட்டு எரிப்பதனை நினைத்து அம் மக்கள் வேதனைப்பட்டார்கள்.

இதனை தொடர்ந்து 1983 ஆம் ஆண்டு முக்கியமான சம்பவமொன்று நிகழ்ந்தது.

மக்கள் விடுதலை முன்னணியுடன், மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதைக்கண்டு ஜேஆர் ஜெயவர்தன பயந்து, எமது கட்சியின் பயணத்தை ஒழிக்க முடிவு செய்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் வளர்ச்சி ஜேஆர் ஜெயவர்தனவின் அரசியலுக்கு தடையாக இருந்தது. அதனால், அவர் எம் கட்சியை தடை செய்ய முயற்சித்தார்.

இதனால், ஜேஆர் ஜெயவர்தனவும், ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து 1 ஆம், 2 ஆம் குறுக்குத் தெருவுக்கு தீவைத்தார்கள். ஒரு கறுப்பு ஜூலையை உருவாக்கினார்கள். அநுராதபுரம் சிற்றம்பலம் மண்டபத்தை கொழுத்தினார்கள். முழு நாடும் தீப்பற்றி எரிந்தது. இதனை ஜே.ஆர். ஜெயவர்தனவின் ரௌடிகளே செய்தார்கள்.

ஆனால், 83 இன் கலவரத்திற்கு மக்கள் விடுதலை முன்னணியினரே காரணம் என எம் கட்சியை தடை செய்தார்கள்.

இதனால், தெற்கில் தமிழ் மக்களின் சொத்துக்கள் அழிக்கப்படுவதையும், உயிர் காவுக்கொல்லப்படுவதையும், தெற்கிலிருந்து தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்படுவதையும் நினைத்து, பிரபாகரனுக்கு வடக்கில் புதிய அரசாங்கமொன்று உருவாக்கவேண்டிய தேவையேற்பட்டது.

ஆகவே, தெற்கில் தமது மக்கள் அழிக்கப்படுவதையும், வடக்கில் நூலகத்தை எரித்தமையும் கூறி வடக்கு இளைஞர்களை யுத்தத்துக்காக அழைத்தார்.

ஆயுதமேந்திய மாபெரும் இயக்கத்தை பிரபாகரன் உருவாக்கினார்.

இதில் சாதாரண தாய் தந்தைகளின் பிள்ளைகளின் உயிர்களே பறிபோயின.

இந்த நாட்டிலுள்ள சிங்கள கிராமங்கள் அச்சத்துடன் காணப்பட்டன. அவர்களின் பிள்ளைகள் இராணுவத்தில் இணைந்தனர்.

மேலும், வவுனியாவை சற்று தள்ளி வாழும் தமிழ் மக்களும் பயத்துடனே வாழ்ந்தார்கள். அவர்களின் பிள்ளைகளும் புலிகளுடன் இணைந்தார்கள்.

தற்போது நமக்கு சண்டையற்ற ஒரு நாடு தேவை. பிரிவினைவாதயில்லாத, மீண்டும் யுத்தம் ஏற்படாத நாடே தேவை.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையுடன் வாழக்கூடிய ஒரு நாட்டை நாம் உருவாக்க வேண்டும்.

எமது பரம்பரை யுத்தம் செய்துக்கொண்ட பரம்பரை. ஆனால் எமது பிள்ளைகளுக்கு யுத்தம் செய்துக்கொள்ள இடமளிக்கக்கூடாது-என்றார். (அ)

# சீரற்ற காலநிலையால் ஒன்பது பேர் உயிரிழப்பு

கொழும்பு, மே. 28

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரை 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ...... நுவரெலியா, இரத்தினபுரி, கண்டி, கேகாலை, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

காசல்ரீ, மவுஸ்சாகலை மற்றும் மேல் கொத்மலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் அதிகரித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சென் க்ளேயர் மற்றும் டெவோன் நீர்வீழ்ச்சிகளின் நீர்வரத்து அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவநாஜிய...

முதல் நூற்றாண்டிலேயே உருவாகிவிட்டது.

இலங்கை தமிழர்களின், சிங்களவர்களின் முன்னோர்கள் நாகர்களின் வழிமுறை சந்ததியினரே.

19ஆம் நூற்றாண்டில் சுதந்திரம் கிடைத்த பின்னர் சிங்கள தலைவர்கள், படித்தவர்கள், ஸ்டேட் கவுன்சிலில் இருந்தவர்கள், பக்குவமான குடும்பத்திலிருந்து வந்தவர்கள் - தமிழர்கள் ஒரு தேசிய இனம் - நாட்டில் ஒரு சமஷ்டி முறையிலான ஆட்சி அமைய வேண்டும் என்று கூறினார்கள்.

நாங்கள் என்ன செய்தோம் எட்டியும் பார்க்கவில்லை. இப்போது என்ன சொல்கின்றோம். ஒஸ்லோ பிரகடனத்தில் எழுதப்பட்டுள்ளது என்கின்றோம். இதனை நான் அவருக்கு பிரசாரமாக சொல்லவில்லை - உண்மையை சொல்ல வேண்டும்.

எங்கள் பிரதிநிதி பௌத்த விகாராதிபதி ஒருவருக்கு ஆயிரம் ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளமை பற்றி ஜனாதிபதியிடம் முறையிட்டவேளை அவர் அந்த திணைக்கள தலைவருக்கு சொன்னார், எனக்கு நீர் இந்த வரலாறு படிப்பிக்க தேவையில்லை. புராதன காலத்தில் வட, கிழக்கில் உள்ள பௌத்த நிறுவனங்களின் நிலம் எல்லாம் தமிழருக்கு சொந்தமானவை. அந்தளவுக்கு நிலைமை மாறியுள்ளது.

இனவாதிகளை பற்றி நான் சொல்லவில்லை. இவர் (ரணில்) இனவாதம் பேசாதவர். ஆனால், சில விடயங்களை செய்வதற்கு துணிச்சல் அற்றவர் - ஆற்றல் அற்றவர். எங்களுடைய கோமாளித்தனம் தொடர்ந்து வந்ததனால் எங்கள் இருப்புக்கே பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்திய - இலங்கை உடன்படிக்கையில் சொல்லப்பட்டவற்றை மீறிவிட்டனர். ஜனாதிபதியை கேளாமல் நீதிமன்றத்தை நிராகரித்தும் அவர்கள் பல விடயங்களை செய்கின்றார்கள்.

எங்களின் ஆட்கள் (தமிழர்கள்) 15 இலட்சம் பேர்தான் இருக்கின்றார்கள். ஆனால், இருப்பது 17 கட்சிகள் மலையகத்தில் உள்ள கட்சிகளுடன் சேர்த்தால் 24கட்சி - எங்கே போகப்போகின்றோம்!

நாங்கள் தற்போது என்ன செய்ய வேண்டும் என்றால், இவற்றை பாதுகாப்பதற்கு என்னென்ன நிறுவனங்கள் உள்ளனவோ தற்போதைய அரசமைப்பின்படி என்னென்ன நிறுவனங்களுக்கு என்ன அதிகாரம் உள்ளதோ அவற்றை பயன்படுத்தி இயக்க வேண்டும்.

இவற்றின் மூலம் இந்த ஆவணங்களை தேடவேண்டும் - தேடிப் பாதுகாக்க வேண்டும் - அருங்காட்சியகங்களை அமைக்கவேண்டும் - காட்சிப்படுத்த வேண்டும் - இவ்வாறான நூல்களை எல்லாம் மக்களுக்கு வழங்கி விளங்கப்படுத்தி மீண்டும் எங்களின் தேசிய உரிமையை - எழுச்சியை வளர்க்கவேண்டும்.

தேசிய உணர்ச்சி எனும்போது நான் அரசியல் பேசுகின்றேன் என எவரும் சொல்லக்கூடாது. சர்வதேச ரீதியாகவும் சிங்கள மன்னர்களின் ஆட்சி வழக்கின் படியும் தமிழ் மக்கள் அவர்களின் அரசுகள், பிராந்தியங்கள் தனித்துவமானவை. அரசுரிமையில் இறைமையில் பங்குள்ளவை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம். இது பற்றி எங்களுடைய துறையில் உள்ளவர்கள்தான் அடக்கி வாசிக்கின்றார்கள். உள்ளதை சொல்வதற்கு பயப்படக்கூடாது.

நாங்கள் மீண்டும் பாராளுமன்ற ரீதியாகவும் வெளிப்புறமாகவும் எங்களுடைய உரிமைகளை நிலை நாட்ட வேண்டும். ஆனால், ஒன்று தமிழீழம் என்ற பேச்சுக்கு இடமில்லை - எந்த ஒரு நாடும் ஆதரிக்காது. இந்த யுகத்தில் ஒருவராலும் அமைக்க முடியாது.

எனினும், இறைமை - அதிகாரம் - சுயநிர்ணய உரிமை இவற்றைதான் பெற்றுக்கொள்ள முடியும். அதுவும் பேச்சு மூலம் பெறுவது அவசியம் - என்றார். (ஐ)

## மாகாணங்களுக்கு...

வெளியிட்ட அறிக்கையை செவிமடுத்தீர்களா என்று கேட்டார். அத்துடன், மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதி காரங்களுடன் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்து வேன் என்றும் கூறினார் - என்று சுமந்திரன் எம். பி. கூறினார்.

இதேநேரம், கடந்த ஜனாதிபதித் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டமை போன்று 13இற்கு அப்பால் செல்வது தொடர்பில் சிந்தித்து நிலைப்பாடு ஒன்றை எடுத்து எமக்கு அறிவியுங்கள் என்று சஜித்திடம் தான் கூறினார் என்றும் சுமந்திரன் இதன்போது தெரிவித்தார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 7இல்)

## கனடா...

இந்த இளைஞர் இன்றைய தினம் கனடா செல்ல விருந்த நிலையில் விபத்தில் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் மட்டுவில் பகுதியில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்துத் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## திலித்...

இந்தக் கூட்டணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கூட்டணிக்கான உடன்படிக்கையில் - மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர், தொழிலதிபர் திலித் ஜயவீர, தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்ஸ, பிவித்துறு ஹெல உறுமயவின் உதய கம்மன்பில, ஜனநாயக இடதுசாரி முன்னணியின் டி. வி. டி. திலகசிறி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஜீ. வீரசிங்க, யுதுகம அமைப்பின் ஏற்பாட்டாளர் கெவிந்து குமாரதுங்க, சுயாதீனமாக செயல்படும் சன்ன ஜயசுமண ஆகியோர் கைச்சாத்திட்டனர். (ஐ)

## கிராமங்களின்...

விவசாயம் மற்றும் கிராமங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, சாத்தியமான இடங்களில் புதிய விவசாய திட்டங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. வருமான மேம்பாடு, உள்கட்டமைப்பு மேம்பாடு, தொழில்நுட்ப பயன்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த அபிவிருத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.


விவசாய அமைச்சில் நடந்த கலந்துரையாடலிலேயே அமைச்சர் மகிந்த அமரவீர மேற்படி விடயங்களை தெரிவித்தார். (ஐ)

## வரும்...

'மலையகம்' இனவியல் அடையாளம். ஆகவே, மலையகம் என்பது நுவரெலியா மாத்திரம் அல்ல. நுவரெலியாவையும் உள்ளடக்கி கேகாலை, இரத்தினபுரி, கண்டி, கொழும்பு, பதுளை, மாத்தளை, கம்பஹா, மொனராகலை, காலி, மாத்தறை, குருநாகல் இன்னும் பல மாவட்டங்களில் பரந்து வாழும் தமிழர்களின் அரசியல் அடையாளம். எமது இந்த கேகாலை மாவட்ட கட்டமைப்பு மாநாடு இந்த மகத்தான உண்மையை அரங்கேற்றியுள்ளது.

கேகாலை மாவட்டத்தில் கடந்த தேர்தலில் சில ஆயிரம் வாக்குகளால் கை தவறி போன பாராளுமன்ற உறுப்பினர் பதவியை, இந்த முறை பெறுவோம். எனது கனவை நனவு ஆக்குங்கள். அது உங்கள் கைகளில் இருக்கிறது. கேகாலையின் எட்டியாந்தோட்டை நான் பிறந்த ஊர். ஆகவே, கேகாலையின் வெற்றி எனது தனிப்பட்ட வெற்றியும்கூட என்பதையும் மறவாதீர்கள் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# மகிந்த ராஜபக்ஷவுடன் இந்திய தூதுவர் சந்திப்பு



கொழும்பு, மே 28

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தேடிச் சென்று சந்தித்துப் பேசியுள்ளார் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா.

நேற்று திங்கட்கிழமை கொழும்பு - விஜயராம மாவத்தையில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

இலங்கை - இந்திய உறவுகள், சமகால அரசியல் நிலவரம் குறித்து இந்த சந்திப்பில் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், பேசப்பட்ட விடயங்கள் குறித்து உடனடியாகத் தெரியவரவில்லை. (ஐ)

# ஸ்ரார்லிங்க் இணைய சேவை இலங்கையில் ஆரம்பமாகிறது

கொழும்பு, மே 28

இலங்கையில் மிகவிரைவான இணைய சேவையை பெறுவதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று எலான் மஸ்கின் ஸ்ரார்லிங்க் இணைய சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்காக திரும்பப் பெறக்கூடிய 9 டொலர்கள் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 2 ஆயிரத்து 700 ரூபாயை வைப்பு செய்யுமாறும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு பிரதேச ரீதியாக சலுகைகள் வழங்கப்படும் என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

எலான் மஸ்க்கின் ஸ்ரார்லிங்கை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஆரம்பகட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொலிஸாரின் விரலை கடித்து தப்பிய நபர்

கொழும்பு, மே. 28

ஈஸி காஷ் முறையில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வரும் ஹந்தயா என அழைக்கப்படும் சந்தேக நபர், அவரை சோதனையிட சென்ற பொலிஸ் பரிசோதகரின் விரலை கடித்து அருகில் உள்ள கால்வாயில் குதித்து தப்பிச்சென்றதாக ருவன்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற ரகசிய தகவலுக்கமைய ருவன்வெல்ல அட்டுலுகம பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றின் அருகில் வைத்து குறித்த நபரை பிடித்து சோதனை செய்ய முற்பட்டபோதே, இவ்வாறு பொலிஸ் பிடியில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் .

குறித்த சந்தேக நபர் , பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் பட்டியலில் உள்ள ஒருவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

மேலும் காயமடைந்த பொலிஸ் பரிசோதகர் கரவனெல்ல ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் ருவன்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## வியாழன்...

பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும், வியாழன், வெள்ளிக்கிழமை ஆசிரியர்கள், அதிபர்கள் சுகவீன விடுமுறையை அறிவித்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்றும் அவர் சொன்னார். (ஐ)

## புகைப்...

விடுபட்டு வருகின்றனர். எனினும், அவர்களை மீண்டும் புகைப்பழக்கத்துக்கு அடிமையாக்க பல்வேறு வழிகளில் ஈர்ப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இளையோர், சிறுவர்களை புகைப் பழக்கத்துக்கு அடிமையாக்க புகையிலை நிறுவனங்கள் பல தந்திரங்களை மேற்கொள்கின்றன. இது தொடர்பில் சமூகத்திலுள்ளவர்கள் அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரூ.1700...

சிறு தேயிலை மற்றும் இறப்பர் தோட்ட உரிமையாளர்கள் மற்றும் பிராந்திய தோட்டக் கம்பனிகள் போன்ற நியாயமற்ற சம்பள உயர்வை ஏற்றுக்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கும் முயற்சிகள் தொழில்துறையின் அடிப்படை இயக்கத் தேவைகளைக் குறைப்பதன் மூலம் சாதிக்க முடியாது. முழு பெருந்தோட்ட எதிர்காலமும் ஆபத் தில் உள்ள நிலையில், இலங்கை முழு வதும் உள்ள தொழிலாளர்கள் மற்றும் சமூகங்களின் வாழ்வாதாரமும் ஆபத்தில் உள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# முடிவை முன்கூட்டி அறிவித்தால் அபிவிருத்தி பணிகளில் பாதிப்பு

## அமைச்சர்களிடம் கூறினாராம் ஜனாதிபதி

கொழும்பு, மே. 28

தான் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கவுள்ளதை முன்கூட்டியே அறிவித்துவிட்டால் அது அபிவிருத்தி பணிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதாலேயே மௌனம் காத்து வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் சிலருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார் என அறியமுடிகின்றது.

அதேவேளை, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் கொழும்பில் இரகசிய சந்திப் பொன்றும் இடம்பெற்றுள்ளது.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.


ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு திரட்டும் வகையிலேயே இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்றிருந்தவர்கள் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதை தங்களிடமாவது அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் கூறுமாறு பிரசன்ன ரணதுங்கவிடம் கூறியுள்ளனர்.

இதன்போது பிரசன்ன ரணதுங்க, ஜனாதிபதி கூறிய மேற்படி விடயத்தை சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கிளிநொச்சியில் தொடரும் யானைகளின் அட்டகாசம்!

## அச்சத்துடன் வாழும் மக்கள்



கிளிநொச்சி, மே. 28

காட்டு யானைகளின் அட்டகாசத்தினால் உயிருக்கும் அச்சுறுத்தல் உள்ளதாக கல்மடு மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர - ரங்கன் குடியிருப்பு பகுதியில் நேற்று முன் தினம் மக்கள் குடியிருப்பு பகுதியில் காட்டு யானைகள் புகுந்து சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில் மக்களால் வாழ்வாதாரத்துக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த தென்னை, பலா, மரவள்ளி, வாழை போன்ற பலன் தரக்கூடிய நிலையில் உள்ள பயிர்களை தினமும் பகுதியாக சென்று காட்டு யானைகள் அழித்து வருவதாக மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

இதன் காரணமாக வீட்டிலிருந்து மாலை 5 மணிக்கு பின்னர் வெளியிடங்களுக்குச் சென்று வீடு திரும்ப முடியாத அச்ச நிலை தோற்றியுள்ளதாகவும், வீட்டில் இருப்பவர்கள் வெளியிடங்களுக்குச் செல்ல முடியாத நிலை தோற்றியுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# பேசாலை முருகன் கோவில் காட்டு பகுதியில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அகழ்வு பணி!

## ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

மன்னார், மே. 28

மன்னார் - பேசாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட முருகன் கோவில் காட்டுப்பகுதியில் நேற்று திங்கட்கிழமை காலை அடையாளம் காணப்பட்ட இடத்தில் மன்னார் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அகழ்வு நடவடிக்கை இடம் பெற்றது.

எனினும், குறித்த அகழ்வு நடவடிக்கைகளின்போது எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை.

பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகன் கோவில் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் புதையல் தோண்டியதாக கூறப்படும் நிலையில் கடற்படை அதிகாரி ஒருவர் உள்ளடங்கலாக 8 பேர் கடந்த சனிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக பேசாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து ஸ்கானர் இயந்திரம் உள்ளடங்கலாக புதையல் தோண்ட பயன்படுத்திய பொருட்களும் மீட்கப்பட்டிருந்தன.

பேசாலை பொலிஸார் குறித்த 8 பேரையும் விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய நிலையில் குறித்த நபர்களை நேற்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

மேலும், நேற்று திங்கட்கிழமை காலை பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருகன் கோவில் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் புதையல் தோண்டியதாக கூறப்படும் இடத்தில் அகழ்வு பணியை முன்னெடுக்க பேசாலை பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய நீதவான் அனுமதி வழங்கினார்.



நேற்றுக் காலை மன்னார் நீதவானின் உத்தரவுக்கு அமைவாக குறித்த பகுதியில் அகழ்வு நடவடிக்கை இடம் பெற்றது.

மன்னார், பேசாலை பொலிஸார் மற்றும் உரிய திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர். குறித்த பகுதியில் இயந்திரம் பயன்படுத்தி அகழ்வுப் பணிகள் நடைபெற்றபோது எவ்வித பொருட்களும் மீட்கப்படவில்லை.

எனினும், அகழ்வுப்பணியின் போது புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க ஊடகவியலாளர்களுக்கு பேசாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அனுமதி வழங்கவில்லை. (அ)

# டில்லி செல்கிறார் ரணில்?

கொழும்பு, மே. 28

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவசரமாக இந்திய பயணமொன்றை மேற்கொள்ள திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இந்தியாவில் லோக் சபா (பாராளுமன்றம்) தேர்தல் நடைபெற்று வரும் நிலையில், தற்போதைய பிரதமர் நரேந்திர மோடியின் பாரதீய ஜனதா கட்சி மீண்டும் ஒருமுறை தேர்தலில் வெற்றி பெறும் என செய்திகள் வெளியாகி வருகின்றன.

அதன்படி, இந்திய பிரதமர் நரேந்திர மோடி புதிய பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொள்ளும் நிகழ்வில் கலந்து கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அதன் மூலம் இந்திய உயர் அதிகாரிகளை சந்தித்து ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஊடக நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், ஜே.வி.பியின் அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க எதிர்வரும் இரு வாரங்களுக்குள் இரு வெளிநாட்டு பயணங்களை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அதன்படி, முதலில் அனுர குமார திஸாநாயக்க இங்கிலாந்துக்கு பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் அதன் பின்னர் ஜப்பானுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இதற்கு முன்னர் அவர் இந்தியா, சுவீடன் மற்றும் கனடா போன்ற நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சுதந்திரக் கட்சியின் செயல்பாடுகளை வேறு இடத்தில் முன்னெடுக்க திட்டம்!

கொழும்பு, மே. 28

தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத்திற் கொண்டு சுதந்திரக் கட்சியின் எதிர்கால செயற்பாடுகளை வேறு இடத்தில் இருந்து முன்னெடுப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் படி, சுதந்திரக் கட்சியின் தலைமையகம் அன்றி, எதிர்கால அரசியல் நடவடிக்கைகளுக்கு கொழும்பில் உள்ள மற்றுமொரு இடம் பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் அரசியல் குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

தற்போது நிலவும் அரசியல் நெருக்கடி மற்றும் நீதிமன்ற தீர்ப்புகள் காரணமாக அரசியல் விவகாரங்கள் மற்றும் தொகுதிகள், மாவட்ட அமைப்பாளர்களை நிரந்தரமாக கூட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதன்படி, புதிய அரசியல் நிலையமொன்றை ஆரம்பித்து, எதிர்வரும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாடளாவிய ரீதியில் உள்ள மாவட்ட, தொகுதி அமைப்பாளர்களை கொழும்புக்கு வரவழைக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆறுகளில் நீர் மட்டம் அதிகரிப்பு

கொழும்பு, மே. 28

அத்தனகலு ஓயா, களனி, களு, கிங் மற்றும் நில்வலா ஆகிய ஆறுகளில் நேற்றுக் காலை நிலவரப்படி நீர் மட்டம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

ஆறுகளில் நீர் மட்டம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டிய மட்டத்தில் உள்ளதாக நீர்ப்பாசனப் பணிப்பாளர் நீரியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவு பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மேற்குறிப்பிட்ட ஆறுகளை அண்மித்த தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# விஜயதாசவுக்கு எதிரான தடை தொடர்ந்து நீடிப்பு!

கொழும்பு, மே. 28

சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக செயற்படுவதற்கு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதன்போது, இந்த வழக்கு தொடர்பான ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய கால அவகாசம் வழங்குமாறு பிரதிவாதி தரப்பின் சட்டத்தரணிகள் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தனர்.

அதன்படி, உரிய ஆட்சேப னைகளை முன்வைக்க கால அவகாசம் அளித்த நீதிபதி, வழக்கை ஜூன் மாதம் 27ஆம் திகதி மீண்டும் அழைக்க உத்தரவிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org